விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 07 திங்கட்கிழமை (20.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## மாகாணசபை முறைமை குறைபாடுகளில்

# இந்தியா இனி தலையிடாது

## நாட்டிற்குள் பேசினால்தான் அதிகாரங்கள் கிடைக்கும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள மாகாணசபை முறைமை உருவாகுவதற்கு இந்தியா காரணமாக இருந்தாலும் அதிலுள்ள குறைபாடுகளை இந்தியா இனி தலையீடு செய்து நிவர்த்திசெய்யாது என வட - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள ஆட்சியாளர்களும் சிறுபான்மை மற்றும் ஜனநாயக சக்திகள் இணைந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே மாகாண சபையினை அர்த்தமுள்ளதாக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் திருத்தச் சட்டமூலம் சிறுபான்மை இனத்திற்குப் பாதகம்

### கட்சிகள் கொழும்பில் கூடி ஆராய்வு

(கொழும்பு)

தேர்தல் முறைமையில் கொணடு வரப்படவிருக்கும் திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகளும் சிறிய அரசியல் கட்சிகளும் கூடி ஆராய்ந்துள்ளன.

பம்பலப்பிட்டி ஓசன் விடுதியில் நேற்று மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி, சுமந்திரன், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டி.யூ.குணசேகர, கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, பேராசிரியர் பொ.பாலசுந் 23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் முறை மாற்றத்தின் பின்பே பாராளுமன்றம் கலைக்கப்படும் !


### ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கிய 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியதன் பின்னரே பாராளுமன்றத்தைக் கலைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி அளித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை வரும் ஜோன் கெரி கூட்டமைப்புடன் முக்கிய பேச்சு



(வாஷிங்டன்)

இலங்கைக்கு அடுத்த மாதம் 2ஆம் திகதி விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 24ஆம் பக்கம் பார்க்க....

## 19-ம் திருத்த விவாதம் நாளைவரை தள்ளிவைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியல் யாப்பின் 19-வது திருத்தச் சட்டம் மீதான விவாதம் நாளை செவ்வாய்க்கிழமை வரை பின்போடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் இன்று திங்கட்கிழமை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு தீர்மானிக்கப் பட்டிருந்தது.

ஆனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விவாதத்தை செவ்வாய்க்கிழமைக்கு தள்ளி வைக்கும் முடிவு எடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகளின் பொது அமைப்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் செனிவிரத்ன 24ஆம் பக்கம் பார்க்க....

## அச்சுவேலியில் கைக்குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி தோப்பு பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்து கைககுண்டு ஒன்றை மீட்டுள்ளதாக அச்சுவேலி பொலி 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரிட்டன் தேர்தலில் இலங்கைப் பெண்

(லண்டன்)

பிரிட்டனின் முன்னணி அரசியல் வாதியான இலங்கைப் பெண் ஒருவர் எதிர்வரும் மேமாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

1979 ஆம் ஆண்டு பிறந்த 36 வயதான சமலி பெர்னாண்டோ என்பவரே இந்த இலங்கைப் பெண் ஆவார். அவரது தாய் வனிதா பெர்னாண்டோ (தாதி), தந்தை சுமல் பெர்னாண்டோ 24ஆம் பக்கம் பார்க்க....

## குடும்பஸ்தர் இருவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை மற்றும் நெல்லியடிப் பகுதிகளில் குடும்பஸ்தர் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

துன்னாலை சக்குசம்பாவைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான இராசையா சிவநாதன் (வயது 45) மற்றும் நெல்லியடியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை – சீனா இராணுவ பேச்சு

(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே இராணுவ உறவை மேம்படுத்தும் பொருட்டு நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் இலங்கை இராணுவம் இடையேயான இந்த நல்லுறவை மேம்படுத்த நீண்ட நேரக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. பயிற்சிகள், ஒத்துழைப் 24ஆம் பக்கம் பார்க்க....





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது இதயம் நிறைந்த நன்றிகள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வுப் பாதையில் வாழ
எங்கள் வாழ்வில் வளம்பெற்று உயர
மங்கலம் நோக்கி மகிழும் இதயத்தீர்!

10.04.2015 வெள்ளிக்கிழமை
சரஸ்வதி திருமண மண்டபத்தில்
(சேர்-பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்) நடைபெற்ற "இல்லறம்
ஏற்புவிழா" வில் கலந்து கொண்ட
அறிவுசால் பெரியோர்களின்
அன்பு ஆசியினாலும்,
உற்றார், உறவினர், சுற்றத்தார்,
நண்பர்கள் நல்வாழ்த்துக்களாலும்
பெரும் மகிழ்வு கொண்டோம்.
உங்கள் அன்பும், ஆசியும்,
என்றும் நிலைபெற்று நிலைக்க
எமது இனிதான இல்லற
சங்கமத்தில் கலந்து கொண்ட
அன்பு நெஞ்சங்கள்
அனைவருக்கும் உவகை
பொங்க அன்புடனும்,
பண்புடனும் எமது இதயம்
நிறைந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



மணமக்கள்:-
**சுஜீவன் - நந்தினி**

திரு.த.க.சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
ஆடியபாதம் றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். யாழ்ப்பாணம்.
தொ.பே:-0775081775

திரு.திருமதி சிவ.ஆறுமுகசாமி
(JP- All Island) குடும்பத்தினர்
NO.42 "ஜெகா பவனம்"
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே:0777299272

(128)

# 324 முன்னாள் போராளிகள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் போராளிகளில் 324 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 723 முன்னாள் போராளிகளில் 324 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற பெரும்பாலானவர்கள், ஏற்கெனவே பட்டப் படிப்பை முடித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

4 பேர் மருத்துவர்களாகவும், 2 பேர் பொறியியலாளர்களாகவும் வெளியேறியுள்ளனர் என புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.


மேலும், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில், 3000 பேர் வரை காவல்துறை அல்லது சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில், பணியாற்றுகின்றனர்.

பலர் ஆடைத் தொழிற்சாலைகளிலும், சுய தொழில்களிலும், ஈடுபட்டுள்ளதாகவும் விடுவிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் போர் முடிவுக்கு வந்த பின்னர் இராணுவத்திடம் 12,088 விடுதலைப் புலிகள் சரணடைந்ததாகவும், அவர்களில், 46 பேர் மட்டுமே, தற்போது புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## இந்.வெளிவிவகார அமைச்சர் அதிகாரியாக

# உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியர் விகாஸ் ஸ்வரப் பதவியேற்பு!



இந்திய வெளிவிவகார அமைச்சின் குரல்தரவல்ல அதிகாரியாக உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியரும், இந்திய வெளிவிவகாரச் சேவையின் மூத்த அதிகாரிகளில் ஒருவருமான விகாஸ் ஸ்வரப் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பதவியேற்றுள்ளார்.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம 29ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தோ- ஆபிரிக்க அமைப்பின் மாநாட்டுக்கான தலைமை ஒருங்கிணைப்பாளராக முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் குரல்தரவல்ல அதிகாரியாக இருந்த சையத் அக்பருதீன் நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்தே, இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய கையுடன்,அவர் இந்தப் பதவியைப் பொறுப்பேற்றார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் புதிய குரல்தரவல்ல அதிகாரியாக பொறுப்பேற்றுள்ள விகாஸ்ஸ்வரப் முன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சில் ஐ.நா அரசியல் விவகாரங்களுக்கான இணைச் செயலாளராக பதவி வகித்திருந்தார்.

அத்துடன் துருக்கி, அமெரிக்கா, எதியோப்பியா, தென்னாபிரிக்கா, பிரித்தானியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் இவர் இராஜதந்திரியாகவும் பணியாற்றி இருந்தார்.

இவர் எழுதி 2005ஆம் வெளியிட்ட "Q&A" என்ற புகழ்பெற்ற நாவல் 43 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நாவலை மையமாக கொண்டு தயாரிக்கப்பட்ட ஸ்லம்டக் மில்லியனர் என்ற திரைப்படம் ஒஸ்கார் விருதுகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நிறைகளை நுகர்வோர் அறிய கடைகளில் பிரத்தியேக தராசு

(கொழும்பு)

பொருள்களின் நிறைகளை நுகர்வோர் சரியாகத் தெரிந்து கொள்ளும் வகையில் நாடளாவிய ரீதியில் விற்பனை நிலையங்கள் மற்றும் பேக்கரிகளிலும் பிரத்தியேகமாக தராசு ஒன்று கட்டாயம் வைக்கப்படல் வேணடும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறைச் சட்டம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டாயமாக்கப்படும் என அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

நுகர்வோரினால் கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் அவர்களினால் வழங்கப்படும் பணத்துக்கு ஏற்றவாறு இல்லை என்றும், அவைகளின் நிறை மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும், நுகர்வோரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இந்த நடைமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக இது தொடர்பில் வர்த்தகர்களுக்கும் நுகர்வோருக்கும் தெளிவுப்படுத்தப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாகப் பிரத்தியேகமாக தராசு ஒன்று வைப்பதைக் கட்டாயப்படுத்தும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஆசிய, ஆபிரிக்க உச்சி மாநாட்டில் சிறப்பு பிரதிநிதியாக சரத் அமுனுகம



இந்தோனேசியாவில் இடம்பெறவுள்ள 60வது ஆசிய, ஆபிரிக்க உச்சிமாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறப்புப் பிரதிநிதியாக உயர்கல்வி அமைச்சர் சரத் அமுனுகம கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உயர்கல்வி அமைச்சர் சரத் அமுனுகம இன்று திங்கட்கிழமை இந்தோனேசியாவுக்கு புறப்படவுள்ளார்.

ஆசிய, ஆபிரிக்க மாநாட்டின் 60வது ஆண்டு நிறைவு மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் உறுதி செய்திருந்த போதிலும், அவர் இந்த நிகழ்வில கலந்து கொள்ள முடியவில்லை என ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் தனது சிறப்புப் பிரதிநிதியாக அமைச்சர் சரத் அமுனுகமவை அவர் அனுப்பி வைக்கவுள்ளதாக ஜனாதிபதியின் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இந்தியா, இந்தோனேசியா, பர்மா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து இந்தோனோசியாவின் பண்டுங் நகரில் ஆசிய, ஆபிரிக்க மாநாட்டு அமைப்பின் முதலாவது கூட்டத்தை நடத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்தன.

1955ஆம் ஆண்டு 29 ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் தற்போது 106 நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மரண அறிவித்தல்

## பொன்னையா இராசேந்திரம் (ராசன்)



அச்சுவேலி கதிரிப்பாய் முரசொலியை பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசேந்திரம் (ராசன்) நேற்று (19.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவக்கொழுந்தின் அன்பு மகனும், புஸ்பராணியின் ( லீலா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் மருமகனும், கஜன் (கிருபன்), அகிலன் (கண்ணன்), எழில்பிரகாஸ் (பிரபா), பிரியங்கா, விஸ்ணுக்கஜனின் பாசமிகு தந்தையும், அருந்தினியின் மாமனாரும், பிரவீனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.04.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் மந்துவில் இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விலங்குக் கடியால் 100 பேர் தினமும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் உள்ள அரச வைத்திய சாலைகளில் விசர் நாய்க்கடி விலங்குக் கடியால் பாதிக்கப்பட்டு தினமும் 100 பேர் வரை சிகிச்சை பெறுவதற்கு வருவதாக யாழ். போதனா வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி சி.எஸ். ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் மத்தியில் நீர் வெறுப்பு நோய் (விலங்கு விசர் நோய்) தொடர்பான விழிப்புணர்வு மிக அவசியமாக தேவைப்படுகிறது.

கடந்த மாதம் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெறாமல் இருந்த நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் விசர் நாய்க்கடி மற்றும் விசர் விலங்கு கடியால் பாதிக்கப்பட்டு தினமும் 20 பேர் வரை சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர்.

விசர் நாய்க்கடியால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள் தினமும் 20 பேர் வரை மேலதிக சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர்.

நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் அதை குணப்படுத்த முடியாது. மரணம் நிச்சயம். எனவே சிறிய விலங்குகள் கடித்தது என எண்ணி அசண்டையீனமாகி இருப்பவர்கள் சிகிச்சைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட முடியும். வீட்டில் வளர்க்கும் விலங்குகளுக்கு உரிய முறையில் தடுப்பு ஊசிகளை செலுத்துவதன் மூலம் அவற்றால் எமக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் இலகுவான முறையில் சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியும்.

கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உள்ளூராட்சி சேவைகள் இணைந்து தமது சேவைகளை உரிய முறையில் மேற்கொண்டால் நீர் வெறுப்பு நோயின் தாக்கத்தில் இருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அத்துடன் விசர் நாய்க்கடிக்கு இலக்கானவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பெறுமதியான ARS வகை ஊசி மூன்று தடவைகள் செலுத்த வேண்டும். போதிய அளவு மருந்து வைத்திய சாலையில் இருப்பதால் விசர்நாய்க்கடியால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளர்களுக்கும் சிறந்த முறையில் சிகிச்சையை வழங்க முடியும்.

கடந்த வருடம் இலங்கை முழுவதிலும் விசர் நாய்க்கடிக்கு இலக்கானவர்களுக்கு 350 பில்லியன் ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தேவாலயத்தில் உண்டியல் திருட்டு

## சந்தேகத்தின் பேரில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் இருந்த உண்டியலை திருடிய ஒருவரை இளைஞர்கள் ஒன்று திரண்டு கையும் மெய்யுமாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் நேற்று காலை பதினொரு மணியளவில் சில்லாலை கதிரமாத கிறிஸ்தவ ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

சில்லாலையில் அமைந்துள்ள குறித்த கிறிஸ்தவ தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமையாகிய நேற்றையதினம் பூசை வழிபாடுகள் முடிந்த பின்னர் தேவாலயத்தினை விட்டு மக்கள் கூட்டம் கலைந்த பின்னர் தேவாலயத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உண்டியலை உடைத்து பணத்தை திருடி சென்றுள்ளான்.

திருட்டுக்கு முன்னர் சந்தேகத்திற்கு இடமான முறையில் நபரொருவர் அப்பகுதியில் நடமாடுவதை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் அங்கு நடமாடிய திருட்டு சந்தேக நபரை தேடி சென்றுள்ளனர். இதன்போது அங்கிருந்த கள்ளுத தவறணை ஒன்றில் குறித்த திருடன் தேவாலயத்தில் திருடிய சில்லறை நாணயங்களையும் தாள் காசுகளாக மாற்றிவிட்டு சென்றுள்ளான்.

இதனையடுத்து குறித்த திருடனை அப்பகுதியூடாக இளைஞர்கள் தேடி சென்றபோது பண்டத்தரிப்பு சந்தியில் திருடன் வந்த மோட்டார் சைக்கிள் பழுதடைந்த நிலையில் நிற்க திருடன் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் நையப்புடைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டான்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பண்டத்தரிப்பினை சேர்ந்தவர் என்றும், தேவாலயத்தில் திருடப்பட்ட உண்டியலில் சுமார் 30 ஆயிரத்திற்கும் அதிகமான பணம் இருந்திருக்கலாம் என இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)




# கின்னஸ்சாதனை படைக்கும் முயற்சியில் இளவாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர்



(யாழ்ப்பாணம்)

கோழி முட்டைகள் ஐம்பதைக் குடித்து கின்னஸ்சாதனை முயற்சியில்யாழப்பாணம் இளவாலையை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ஈடுபட்டிருந்தார். இச்சாதனை முயற்சி நேற்று முற்பகல் 11 மணியளவில் இளவாலை கருகம்பனை சனசமூக நிலையம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி வடக்கு திருவிழானை சேர்ந்த அப்புத்துரை ராசேந்திரம் (வயது-53) என்பவரே இவ்வாறு சாதனை முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இதுவரை 110 முட்டைகள் குடிக்கப்பட்டதே உலக சாதனையாக உள்ளது. இச்சாதனையை முறியடிக்கும் பரீட்சார்த்த நடவடிக்கையாகவே இச்சாதனை முயற்சியினை அவர் மேற்கொண்டிருந்தார்.

இதில் முற்பகல் 11.10 மணியளவில் முட்டை குடிக்க ஆரம்பித்த அவர் 11.13 மணி 14 விநாடிகளில் 56 முட்டைகளை குடித்து இடை நிறுத்திக் கொணடார். இச்சாதனை முயற்சி தொடர்பில் ராசேந்திரம் தெரிவிக்கையில், பல நாட்கள் பயிற்சியின் பின்னரே இச்சாதனை முயற்சியினை மேற்கொள்ள முடிவு செய்திருந்தேன்.

எனது முயற்சி எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியை அளிக்காவிட்டாலும் தொடர்ந்தும் இவ்வாறு சாதனை முயற்சியை மேற்கொள்ளவுள்ளேன். ஒவ்வாமை காரணமாகவே 56 முட்டைகளை குடிதது விட்டு சாதனை முயற்சியை இடை நிறுத்தினேன். இவ்வாறான சாதனை முயற்சிகளை எமது இளம்தலைமுறையினரும் மேற்கொள்ள வேணடும் என்றார்.

மேலும் ராசேந்திரத்தின் இச்சாதனை முயற்சியினை காண்பதற்காக பெருமளவிலான அயற் பகுதி மக்கள் திரண்டிருந்ததோடு கைதட்டி உற்சாகமும் அளித்திருந்தனர். (இ-4)

# 13 வீதிகள் புனரமைப்புக்காக 21.1 மில்.ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் 21.1 மில்லியன் ரூபா செலவில் 13 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பி.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருட வரவு செலவு திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள், புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நல்லூர் பிரதேச சபையின் கீழ் புனரமைப்பு செய்யப்படவுள்ள வீதிகளில் நந்தாவில் முதலாம் ஒழுங்கை, சிவகுரு லேன c.c.t.m பாடசாலையில் இருந்து குட்செட் வரையான ஒழுங்கை, முத்தட்டு மட ஒழுங்கை, பிள்ளையார் வீதி, கண்ணகை பார்வதி அம்மன் வீதி, புதிய செங்குந்தா வீதி, காளிகோவில் வடக்கு பகுதியில் இருந்து தாளையடி ஒழுங்கை, ஞானபாஸ்கரோதைய வீதி, மாரியமமன் வீதி, பூம்புகார் 10, 11 ஆம் குறுக்கு ஒழுங்கை, நாகபூசனி அம்மன் வீதி, மணியந்தோட்டம் வீதி, பெரிய தோட்டம் வீதி ஆகிய வீதிகள் இந்த வருடம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் கடந்த வருட வரவு செலவு திட்டத்தில் 14.15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை புனரமைப்பு செய்யப்படாத 16 வீதிகளும் இந்த வருடம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# இராசி பலன்

20.04.2015
(சித்திரை 07, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துதியை முன்னிரவு 9.40 மணிவரை
பரணி பிற்பகல் 3.26 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
கார்த்திகை விரதம், சித்திரைப் பரணி
சிவதொண்டர் குருபூசை

வளவன்

**மேடம்:** குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியமென்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை கூடும், சிலர் மீது கரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபசெலவுகள் அதிகரிக் கும், ஆதாயமில்லாத அலைச்சல் கள் ஏற்படலாம், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், பணவரவுகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் சிறப் புகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் தேடிவரும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், வியாபார விருத்தியுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** சஞ்சலங்கள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, காரியங்களில் தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, விரயங்கள் அதிகமாகும் வாய்ப்புண்டு.

**துலாம்:** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், உடன் பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர், சுவாரஸ்யமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னே ற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சதவீத சேமிப்பு போதுமா??

கையில வாங்கல, பையில போடல, காசு போன எடம் தெரியல. இந்தப் பழைய பாடலை மேற்கோளிட்டு இணையதளத்தில் சமீபத்தில் புலம்பியிருந்தார் மாதச் சம்பளக்காரர் ஒருவர். பெரும்பாலான சம்பளதாரரர்களின் நிலைமை இதுதான்.

சம்பளம் போட்ட தகவல் வந்தவுடன், செல்போன் ரீசார்ஜ் தொடங்கி, ரிவி ரீசார்ஜ், வீட்டு தொலைபேசி கட்டணம், வீட்டு மின்கட்டணம் மறறும் பலவித கட்டணங்கள் என அனைத்தையும் செலுத்திய பிறகு வெறுங்கையுடன்தான் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும்.

மாதாந்திர சம்பளதாரரர்கள் தங்களுக்காகவும், தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்காகவும் எவ்வளவு தூரம் திட்டமிடுகிறார்கள், எந்த அளவுக்கு சேமிக்கிறார்கள் என ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வு முடிவுகள் பல நுட்பமான தகவல்களை வெளிக்கொண்டு வந்துள்ளது.

50 சதவீதத்துக்கும் அதிகமான மாதாந்திர சம்பளதாரர்கள் தங்களது ஊதியத்தில் 10 சதவீதத்துக்கும் குறைவான தொகையைத்தான் சேமிக்கிறார்கள்.

10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பாக்கெட் மணி அளிப்பதை மூன்றில் இருமடங்கு பெற்றோர் ஏற்கின்றனராம்.

குழந்தைகளுக்கான முதலீடுகளில் பெற்றோர்களின் தேர்வு முதலில் வங்கி சேமிப்பாக உள்ளது. அடுத்தது நிரந்தர சேமிப்புக் கணக்கில் போடுவதை விரும்புகின்றனர். பங்குச் சந்தை, பரஸ்பர நிதித் திட்டங்களில் முதலீடு செய்யும் பெற்றோர்களும் உள்ளனர். காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்யும் தந்தைகளும் உள்ளனர். பெண் குழந்தையாக இருப்பின் தங்க நகைகளில் முதலீடு செய்வோரும் உண்டு.

பெற்றோரின் வருமானம் உயரும் போது அதை சேமிப்பதற்குப் பதிலாக குழந்தைகளுக்காக செலவிடும் பெற்றோரே அதிகம் உள்ளனர். 2008-ம் ஆண்டில் அமெரிக்காவில் பெருமளவு நிதி நெருக்கடி ஏற்பட்டு. அந்நாட்டு பொருளாதாரமே முடங்கிப் போனது. மக்களின் வாங்கும்சக்தி குறைந்தது. இவை அனைத்துக்கும் காரணம் அங்குள்ள மக்களின் செலவழிக்கும் திறன் அதிகமாக இருந்ததுதான்.

உலகம் முழுவதும் பொருளாதார மந்த நிலையின் பாதிப்பு அதிக அளவில் காணப்பட்டபோதிலும் இலங்கையில் இதன் தாக்கம் குறைவாக இருந்ததற்கு இங்குள்ள மக்களின் சேமிக்கும் திறன் அதிகமாக இருந்ததுதான் என்று பொருளாதார நிபுணர்கள் கூறினர்.

ஆனால் இப்போது இங்கும் செலவழிக்கும் கலாசாரம் வெகு வேகமாக பரவி வருகிறது. இது எதற்கு வழிவகுக்குமோ?

# இளைஞர்களின் மனம் கவர்ந்த குளிர்பான நாமமாக கொகா கோலா




கொகா-கோலா பெவரேஜஸ் சிறிலங்கா, அண்மையில் இடம்பெற்ற SLIM Nielsen மக்கள் விருப்ப விருதுகள் 2014 (SLIM Nielsen People's Choice Awards) நிகழ்வில் தொடர்ச்சியாக 8-வது தடவையாக ஆண்டுக்கான இளைஞர்களின் மனம்கவர்ந்த குளிர்பான வர்த்தக நாமம் என்ற (Youth Beverage Brand of Year Award)விருதினை வென்றுள்ளது.

இந்த விருதானது, SLIM இனைச் சேர்ந்த கார்த்திக் இளங்கோவனால் கையளிக்கப்பட்டது.

இத்தனை வருடங்களில் கொகா-கோலா, இலங்கையர்களினால் மிக வரும்பப்படும் விருப்பத்திற்குரிய குளிர்பானமாக விளங்குகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.




# விருந்தோம்பல் முகாமை. பட்டமளிப்பு

SLIIT இலுள்ள விருந்தோம்பல் முகாமைத்துவத்திற்கான கொழும்பு அகடமியானது (Colombo Academy of Hospitality Management) (CAHM) ஏப்ரல் மாதம் 8ஆந் திகதி தனது வருடாந்தப் பட்டமளிப்பு விழாவினைத் தாஜ் சமுத்திராவில் கொண்டாடியது.

நாட்டிலுள்ள முன்னணி விருந்தோம்பல் முகாமைத்துவ நிறுவனமான CAHM ஆனது, உணவு, உல்லாசப் பயணத்துறை, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் நிபுணத்துவம் வாய்ந்த, உலகப் புகழ்பெற்ற நிறுவனமான, வில்லியம் எங்கிலிஸ் நிறுவகம் (William Angliss Institute) மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான இலங்கை நிறுவகம் (Sri Lanka Institute of Information Technology) என்பவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

தற்போது சுமார் 320 மாணவர்களைக் கொண்ட இந்நிறுவகமானது, விருந்தினர் சேவை, தொழில்சார் உணவு மற்றும் பானங்கள், அலுவலக நுழைவிட முகாமைத்துவம், நிறைவேற்றதிகாரிகளின் அபிவிருத்தி, சர்வதேச விருந்தினர் கலாசாரத்தினைப் புரிந்துகொள்ளல், முரண்பாடுகள் முகாமைத்துவம், மனித வளம் மற்றும் ஆளணி அபிவிருத்தி போன்ற பெயர் குறிப்பிடப்பட்டவை உள்ளடங்கலான விருந்தோம்பல் தொடக்கம் கூட்டாட்சி வரையிலான பல கற்கைநெறிகளை வழங்குகின்றது.

2 வருட காலத்தைக் கொண்ட இந்நிகழ்ச்சியானது முழுமையாக 4 கட்டங்களைக் கொண்டு காணப்படுகின்றது: அவை விருந்தோம்பலில் III -வது சான்றிதழ், விருந்தோம்பலில் IV-வது சான்றிதழ், விருந்தோம்பல டிப்ளோமா மற்றும் விருந்தோம்பலில் உயர் டிப்ளோமா என்பவையாகும்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,901.06 | 7,086.41 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,888.33 | 4,012.56 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,871.751

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ஜி.எஸ்.பினான்ஸ் (23.90),சிற்றி ஹவுசிங்(13.90), எஸ்எம்பி லீசிங் (x)(0.50), என்ரஸ்ட் செக்.(42.30),பெஸ்ட் கப்பிரல்(41.60).

சரிவைக் கண்டிய பங்குகள்(ரூ.): பரஹன்(581.00)செலிங்கோ இன்சூரன்ஸ் (1503.00), ஹெல்சே.(40.20),சாம்சன் இன்ரனட்(98.00), ரம்பொட போல்ஸ்(26.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# சீன சுற்றுலா பயணிகள் வருகை அதிகம்

2015 மார்ச் மாதம் வரையிலான ஒரு வருட காலப்பகுதியினில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து ஐம்பத்து ஒரு சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த தொகை 18 சத வீத அதிகரிப்பு என சுற்றுலாத்துறை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 5 வருட காலப்பகுதியினுள், இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 லட்சமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்றவகையில், அவர்களுக்கு தங்குமிட வசதிகளை அளிப்பதற்காக 22 ஆயிரத்து 500 அறைகள் நிர்மாணிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக தற்போது 75 புதிய விருந்தகங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இந்த நிர்மாணப் பணிகள் அடுத்த ஆண்டு நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sri Lanka the wonder of asia

# பற்றாக்குறை

நாட்டின் பொருளாதார நிர்வாகத்தில் பற்றாக்குறை என்பது சர்வ சாதாரணமான நிகழ்வுதான். இலங்கை மட்டுமல்ல அமெரிக்கா உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பற்றாக்குறை பட்ஜெட்தான் போடப் படுகிறது. பிற நாடுகளின் 2014-ம் ஆண்டு பற்றாக்குறை பட்ஜெட்டை நாம் பார்த்து சற்று ஆறுதல் அடையலாம். உபரி பட்ஜெட்டை போடும் நாடுகள் சிலவும் உள்ளன. அவற்றைப் பார்த்து ஏக்கப் பெரு மூசசுதான் விட முடியும். பிற நாடுகளின் பற்றாக்குறை அளவு இது

(தொகை கோடி டொலர்களில்)

**சுவீடன**
வருமானம் 27,760, செலவு 27,710,
உபரி 500

**சுவிட்சர்லாந்து**
வருமானம் 21,790,செலவு 21,450,
உபரி 340

**இத்தாலி**
வருமானம் 1,06,510,செலவு 1,11,200,
பற்றாக்குறை 4,690,ஜிடிபி-யில் 3%

**குரேஷியா**
வருமானம் 3,010,செலவு 2,630
உபரி 380

**ஜெர்மனி**
வருமானம்1,55,100,செலவு 1,58,800,
பற்றாக்குறை 3,700,ஜிடிபி-யில் 2.3%

**ஹங்கேரி**
வருமானம் 7,400,செலவு 6,820
உபரி 580

**ஈரான**
வருமானம் 13,120,செலவு 9,260
உபரி 3,860

**இங்கிலாந்து**
வருமானம் 1,44,950,செலவு 1,65,100, பற்றாக்குறை 20,150,
ஜிடிபி-யில் 17%

**ஈராக்**
வருமானம் 17,820,செலவு 20,020,
பற்றாக்குறை 1,340

**நோர்வே**
வருமானம் 28,050, செலவு 20,950,
உபரி 7,100, ஜிடிபி-யில் 25.3%

**பிரான்ஸ்**
வருமானம் 1,38,600, செலவு 1,53,500,
பற்றாக்குறை 14,900,ஜிடிபி-யில் 9.7%

**கிரீஸ்**
வருமானம் 12,950,செலவு 15,860,
பற்றாக்குறை 2,910

**கனடா**
வருமானம் 68,780,செலவு 74,080,
பற்றாக்குறை 5,300,ஜிடிபி-யில் 7.4%

**அமெரிக்கா**
வருமானம் 3,00,172
செலவு 3,65,052
பற்றாக்குறை 64,880,ஜிடிபி-யில் 17.7%

**ஸ்பெயின்**
வருமானம் 54,520,செலவு 67,210
பற்றாக்குறை 12,690,ஜிடிபி-யில் 18.9%

**பிரேசில்**
வருமானம் 97,830,செலவு 90,100
உபரி 7,730,ஜிடிபி-யில் 8.6%

**துருக்கி**
வருமானம் 19,040,செலவு 20,790
பற்றாக்குறை 1,750

**சிங்கப்பூர்**
வருமானம் 5,503,செலவு 5,340
உபரி 162

**ஹொங்காங்**
வருமானம் 5.550,செலவு 4,700
உபரி 850

**தாய்லாந்து**
வருமானம் 20,030,செலவு 18,710
உபரி 1,320

**அவுஸ்திரேலியா**
வருமானம் 49,810,செலவு 54,100
பற்றாக்குறை 4,290,ஜிடிபி-யில்- 8.6%

**சீனா**
வருமானம் 2,11,800,
செலவு 2,29,200
பற்றாக்குறை 17,400,ஜிடிபி-யில் 8.2%

**தென் கொரியா**
வருமானம் 29,610,செலவு 28,720
உபரி 8,900

**ஜப்பான்**
வருமானம் 1,73,900
செலவு 2,14,900
பற்றாக்குறை 41,000
ஜிடிபி-யில் 23.5 %

**ரஷ்யா**
வருமானம் 42,860
செலவு 44,010
பற்றாக்குறை 1,150,ஜிடிபி-யில் 2.7%

**குவைத**
வருமானம் 11,400,செலவு 5,400
உபரி 6,000

**ஓமான்**
வருமானம் 2,970,செலவு 2,250
உபரி 720

**ஐக்கிய அரபு எமிரேட்ஸ்**
வருமானம் 11,340,செல்வு 9,950
உபரி 1,790

**இந்தியா**
வருமானம் 24,000
செலவு 32,500
பற்றாக்குறை 8,500,ஜிடிபி-யில் 3.9%

**சவூதி அரேபியா**
வருமானம் 22,110
செலவு 21,170
உபரி 240

# ஏற்றுமதி இலக்கு அதிகரிப்பு

2020-ம் ஆண்டுக்கான இலங்கையின் ஏற்றுமதி இலக்கை 20 பில்லியன் டொலர்களில் இருந்து மேலும் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபை இதனைத் தெரிவித்துள்ளது.

ஆட்சி மாற்றத்தின் கீழ் ஏற்பட்டுள்ள சந்தை வாய்ப்பை பயன்படுத்தி இந்த ஏற்றுமதி இலக்கை அதிகரிக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலக்கின் மட்டம் குறித்து அறிவிக்கப்படவில்லை.

2014ம் ஆண்டு இலங்கையில் இருந்து 11.9 பில்லியன் டொலர்கள் பெறுமதியன ஏற்றுமதிகள் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.89 | 134.68 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 196.17 | 201.81 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 141.08 | 145.78 |
| சுவிஸ் பிராங் | 136.98 | 141.82 |
| கனேடிய டொலர் | 107.50 | 111.06 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.59 | 105.75 |
| சிங்கப்பூர் டொலர் | 97.27 | 100.41 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

**இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவாக நடவடிக்கை எடுப்பேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, குருவாயூர் கோவிலில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்கள் மற்றும் தமிழ் மீனவர்கள் என்று தனித்தனியான பிரிவினர் இல்லை என்றும் சகல மீனவர்களும் சமமான முறையில் நடத்தப்படுவர் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் பிரவேசித்தால் சுடப்படுவார்கள்" என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கூறியது வெறுமனே பகிடியா கும். இதனை சிலர் தவறாக புரிந்து கொண்டுள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரி வித்துள்ளார்.

டுபாயில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது இந்திய ஊடகம் ஒன்றிடம் சந்திரிகா இதனை தெரிவித்தார்.

செய்தியாளர்கள், ரணில் விக்கிரமசிங்கவை குழப்பும் வகையில் கேள்விக்கேட்ட போது தமது வீட்டுக்குள் தேவையற்றவர்கள் நுழைந்தால் அவர்களை சுடுவதற்கு அதிகாரம் உண்டு என்று ரணில் கூறியுள்ளார்.இது வெறுமனே நகைச் சுவையாக கூறப்பட்ட விடயம் என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அரசாங்கத்துடன் இலங்கை சிறந்த நல்லுறவை பேணுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சீனாவை பற்றி குறிப்பிட்டுள்ள அவர் எந்த நாடும் இலங்கையை பயன்படுத்தி இலாபம் பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று சந்திரிகா தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் கிடைக்காமை குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஜே-61 நெடுங்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள சில குடும்பங்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்காமை தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மனிதவுரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மனிதவுரிமைகள் ஆணைக்குழு அதிகாரி, யாழ். அரச அதிபரின் பிரதிநிதி, யாழ்ப்பாணம் பிரதேச செயலர், ஜே-61 கிராம அலுவலர் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் இதில் கலந்து கொணடனர்.

இக்கலந்துரையாடலில் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மேற்படி வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்காமைக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலும் ஒரு கலந்துரையாடல் இவ் வாரம் இடம்பெறவுள்ளது என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

(C-478)

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776


## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 80 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார உதவி வழங்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பெண்கள், இளைஞர்கள் தொழில்துறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருநது 80 பயனாளிகள் தெரிவு செயயப்பட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளதாக வர்த்தக தொழிற்றுறை மன்ற தலைவர் ே.விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளை முன்னுரிமைப்படுத்தி இத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

பிரதேச செயலர், கிராம அலுவலர்களின் உதவியுடன் எமது கள உத்தியோகத்தர்கள் பயனாளிகளை தெரிவு செய்து வருகின்றனர்.

மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களைத்தெரிவு செய்து அவர்களின் அடுத்த கட்ட வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் வகையில் சிறுகைத் தொழில்களை தெரிவு செய்து அவர்களுக்கு பயிற்சிகள், தொழில் வாய்ப்பு, சந்தைப்படுத்தல், மூலதன உதவிகள் என்பவற்றை வழங்கவுள்ளோம்.

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் அதிக பெண தலைமைத்துவ குடும்பங்கள் இருப்பதனால் அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்காக சிறந்த திட்டமாக இது இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு திரியசவிய கடன் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபா கடன் உதவி

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி சமுர்த்தி நிவாரணங்கள் பெற்றுக் கொள்ளாதவர்களை முன்னுரிமைப்படுத்தி ஏப்ரல் மாதத்தில் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் திரியசவிய கடன் திட்டம் ஒவ்வொரு சமுதாய அடிப்படை வங்கிகளிலும் (சமுர்த்தி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் இது வரை 92 ஆயிரத்து ஐந்நூற்று பதினொரு வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்கு பல்வேறு கடன்திட்டங்களின்ஊடாக 3393.57 மில்லியன் ரூபாய் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திரிய சவிய கடனை பெற்றுக் கொள்ள விரும்பும் பயனாளிகள் சமுர்த்தி கணக்கில் 3 மாதங்களுக்கு மேல் இணைந்திருக்க வேண்டும். சமுர்த்தி சிறுகுழுவில்இணைந்திருக்கவேண்டும். வங்கி கணக்கில் 500 ரூபாய் சேமிப்பில் இருக்க வேண்டும்.

அத்துடன் இக் கடன் 4 வீத வட்டியில் வழங்கப்பட்டு 36 மாதங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இக் கடன் வழங்கப்படவுள்ளது.

இக் கடனை பெற்றுக் கொள்ளும் பயனாளிகளுக்கு வயது எல்லை இல்லை எனவும் உரிய காரணங்களை தெரிவித்து வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் இக் கடனை பயனாளிகள் பெற்று நன்மை அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


**முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்**

ஆறுதல் நிறுவனம் முன்பள்ளி டிப்ளோமா சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரை, சிறுகதை எழுத்தாக்கத் தேர்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. ஆறுதல் நிறுவத்தினர் வழங்கிய டிப்ளோமா சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் சான்றிதழ் இலக்கத்தை குறிப்பிட்டு உங்கள் விபரங்களுடன் தொலைபேசி இலக்கத்தையும் தெரிவித்துப் போட்டிகள் பற்றிய விபரம் அறிய விண்ணப்பியுங்கள்

**முகவரி: ஆறுதல் நிறுவனம், இல.51 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-743)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L சுவீடன் PR<br>தொ.இ: B/560 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 37 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/991 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 43 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC லண்டன் PR<br>தொ.இ: B/561 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 44<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/992 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/562 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 07<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.COM, SLAS/ உதவி ஆனையாளர்<br>தொ.இ: G/3733 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CIMA/ தனியார்<br>தொ.இ: B/564 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 33 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/1002 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றத்திலும் சுயநல அரசியல்

## டக்ளஸ் எம்.பி.குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலி. வடக்கு மீள்குடியேற்றம் தொடர்பில் என்ன நடக்கிறது என்பது எமது மக்களுக்கு இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது எனவும் மக்களைத் தொடர்ந்தும் குழப்ப நிலையில் வைத்திருக்க வேண் டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது எனவும் மீள்குடியேற்றத்திலும் சுயநல அரசியல்வாதிகளின் தலையீடு அதிகரித்து வருவதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா குற்றம்சாட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட காணிகளில் மீள்குடியேற்றம் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊடகங்களில் தெரிவித்து வருகின்றனர். இவர்களது கூற்றுக்கள் எமது மக்களை மீள்குடியேற்ற விடயத்திலும் குழப்புவதாகவே அமைந்துள்ளன. நடைமுறை சாத்தியமான வழிமுறையில் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அக்கறை காட்டாத கூட்டமைபபினர், அப் பிரச்சினைகளை வைத்து தொடர்ந்தும் தங்களது சுயலாப அரசியலையே நடத்த முற்படுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து கடந்த காலங்களில் கணிசமான காணிகளில் நான் மீள் குடியேற்றங்களை மேற்கொண்டுள்ளேன். இதன்போது, இழுத்தடிப்புக்களோ அல்லது எமது மககளை ஏமாற்றங்களுக்கு உட்படுத்தக் கூடிய நடவடிக்கைகளோ இடம்பெற்றிருக்கவில்லை. எமது நடைமுறை சாத்தியமான வழிமுறைகளினூடாக, சுமுகமான பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்து, எமது அயராத உழைப்பின் மூலமே அத்தனை மீள் குடியேற்றத் திட்டங்களும் சாத்தியமாகின.

ஆனால், இன்று அப்படியொரு செயற்பாட்டுத் தன்மை இருப்பதாகத் தெரியவில்லை.

பாதுகாப்புக்கு பயன்படாத காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என இராணுவத் தளபதி கூறியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்ததாக ஒரு செய்தி கடந்த 11ஆம் திகதி ஊடகங்களில் வெளிவந்நிருந்தது. இந்த நிலையில், குடாநாட்டில் மீள் குடியேற்றத்திற்கு படையினர் தொடர்ந்தும் தடை என அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியதாக ஒரு செய்தி 17ஆம் திகதி ஊடகங்களில் வெளிவந்திருக்கிறது.

உண்மையில், வலி வடக்கு மீள் குடியேற்றம் தொடர்பில் என்ன நடக்கிறது என்பது எமது மக்களுக்கு இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது. மக்களைத் தொடர்ந்தும் குழப்ப நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது.

மக்களை குழப்ப நிலை யில் வைத்திருப்பதன் ஊடாகவே தங்களது சுயலாப அரசியலை முன்னெடுக்க முடியுமென கூட்டமைப்பினர் நம்புகின்றனர். எனவே, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சாத்தியமான வழிமுறைகளை கையாள அவர்கள் விரும்புவதில்லை என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## துர்நாற்றத்தால் அசௌகரியம்

(கரணவாய்)

நெல்லியடி புதிய பொதுச் சந்தையில் கட்டப்பட்டுள்ள மலசல கூடத்தைப் பயன்படுத்தாது பழைய சந்தைப் பகுதியிலுள்ள ஓர் ஓடையைப் பயன்படுத்துவதனால் அருகிலுள்ள வெற்றிலை வியாபாரிகளும் பொதுமக்களும் துர்நாற்றம் காரணமாக அசௌகரியத்தை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பொதுச் சந்தையில் உள்ள மீன்சந்தைப் பகுதியும் துர் நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அனைவரது சௌகரியத்தையும் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை மேற்படி நடவடிக்கையினால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3-60)




## வலம்புரி செய்தியையடுத்து திருத்தப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏ-9 வீதியில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள புகையிரதக் கடவை, வீதி சமிக்ஞை விளக்குகள் பழு தடைந்துள்ளமை தொடர்பாக கடந்த 17 ஆம் திகதியன்று வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை அடுத்து உடனடியாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பழுது சீர்செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதான புகையிரத நிலைய அதிபர் ரி. பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த 15,16 ஆம் திகதிகளில் குறித்த புகையிரதக் கடவை மற்றும் வீதி சமிக்ஞை விளக்குகள் பழுதடைந்து காணப்பட்டமையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களையும் ஆபத்து நிறைந்த போக்குவரத்தையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் வலம்புரி பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு புகையிரத நிலைய அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் பாலாவி பகுதியில் கைது

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மேற்படி சந்தேக நபர் அதே பகுதியினை சேர்ந்தவர் எனவும் மணல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட சிறிய வடிரக வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் உழவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங்களை பயன்படுத்தி மணல் கொள்ளையில் ஈடுபட்டு வந்த மணல் கொள்ளையர்கள், தற்போது இலகுவான முறையில் அதிகளவு மணல் கொளளையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபடும் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சந்தேக நபரை நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-29)

## எம் முன்னோர்களின் தீர்க்கதரிசனமே எமது இனத்தின் இருப்புக்குக்காரணம்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு



எம் முன்னோர்களின் தீர்க்க தரிசனமான செயற்பாடுகளே எமது இனம் பல்வேறு நெருக்கடிகளையும், வார்த்தைகளால் வர்ணித்து விட முடியாத கொடூரங்களையும் தாண்டி இன்றும் யாருக்கும் அடி பணியாமல் தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமாகும் என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலைய 55ஆவது ஆண்டு விழாவும், தமிழ்ப்புத்தாண்டு விழாப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும் கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சனசமூக நிலையத்தலைவர் ந.அன்பமுகன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்அங்குமேலும்தெரிவிக்கையில்,

எமது தமிழினம் தோன்றிய காலத்தைப்பற்றி ஒவ்வொரு ஆராய்ச்சியாளர்களும் ஒவ்வொரு விதமாகக் குறிப்பிட்டு வருகிறார்கள். எது எவ்வாறு இருந்தாலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தோன்றிவிட்ட பண்பாட்டுச் செழுமையும், பாரம்பரியமும் மிக்க எமது இனம் பல்வேறு நெருக்கடிகளுக்களையும் தாண்டி பல சவால்களுக்கும் முகம் கொடுத்து தனது இருப்பைக் கொண்டுள்ளதற்குக் காரணம் எமது இனத்தின் முன்னோர்களின் தீர்க்கதரிசனமும், தியாகத்தொண்டுகளும்தான்.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு பாரிய பங்கை இவ்வாறான சனசமூக நிலையங்கள் வழங்கி வந்துள்ளன. மக்களை ஒன்றுதிரட்டி காலமாற்றத்துக்கு ஏற்றாற்போல் கருத்துக்களை அவர்களது உள்ளங்களில் விதைத்து, அவர்களது இனஉணர்வுகள் மங்கிவிடாமல், எனது இனத்தின் தொடர்ச்சியான இருப்பை முன்னகர்த்தும்பாரிய பணியை ஒவ்வொரு ஊர்களிலு முள்ள சனசமூக நிலையங்கள் செய்து வருகின்றன. அந்தவகையில் இந்த சிவலைப்பிட்டி சனசமூக நிலையமானது தனது பணியை 55 ஆண்டு காலமாக சிறப்பாக ஆற்றி வருகின்றது. அதன் ஆரம்ப காலத்தலைவர்கள இம்மேடையில் பாராட்டுப்பததிரம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய இளைஞர்களுக்கு மிகப்பெரிய கடமை இருக்கின்றது. என்ன நோக்கத்திற்காக இம்மூத்தவர்கள் தங்களை அர்ப்பணித்து இவ்வாறான கருமங்களை அன்றைக்கு முன்னெடுத்தார்களோ, அவற்றிலிருந்து வழுவாது நாமும், அந்த இலட்சியங்களை அவர்கள் விட்ட இடத்திலிருந்து முன்னெடுத்துச் சென்றே ஆக வேண்டும். வெறுமனே மூத்தவர்கள் செய்த சாதனைகளை மாத்திரம் சொல்லி காலம் கடத்திக்கொண்டிருக்காமல், இளைஞர்கள் ஒவ்வொருவரும் தங்களை சாதனையாளர்களாக மாற்றுவதற்கு களம் அமைக்கும் இவ்வாறான அமைப்புகளில் ஒன்று திரண்டு செயற்பட்டு, தமக்கும், தமது ஊருக்கும், ஒட்டுமொத்த எமது இனத்துக்கும் பயனுள்ளவர்களாகப் பணிகளை ஆற்றிட முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவது குறித்து கட்சிநிபந்தனை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் போட்டியிடுவது குறித்து நிபந்தனைகளை விதி க்க கூட்டமைப்பு கட்சிகள் தீர்மானித்துள்ளன.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்றால் நிபந்தனை அடிப்படையிலேயே போட்டியிடப் போவதாக கட்சிகள் அறிவித்துள்ளன.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் திட்டத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டால் ஆதரவளிக்க முடியாது என தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமையிலான அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டுமென கோரியுள்ளன.

அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கமொன்றையே அமைக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் அதிகளவு ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டு, கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் பிரதமர் வகிக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கட்சித் தலைவர்களிடம் கோரியுள்ளார். (இ-5)




# வரணி கரம்பைக் குறிச்சியில் 13குரங்குகள் பிடிக்கப்பட்டன



வரணி கரம்பைக்குறிச்சி கிழக்குப் பகுதியில் பொதுமக்களால் 13 குரங்குகள் பிடிக்கப்பட்டு காட்டில் விடுவதற்காக வனவிலங்கு அதிகாரிகளிடம நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

விவசாயத் திணைக்களமும் வனவிலங்கு அதிகார சபையினரும இணைந்து பயிர்களை நாசம் செய்யும் குரங்குகளது நடமாட்டத்தினை கட்டுப்படுத்தி அவற்றினை பக்குவமாக காட்டில் கொண்டு சேர்க்கும் திட்டம் பொதுமக்களது உதவியுடன தென்மராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென அமைக்கப்பட்ட கூண்டுகளில் குரங்குகள் தந்திரமாக வரவழைக்கப்பட்டே அப்புறப்படுத்தப்படுகின்றன.

பெரும் நாசங்களை ஏற்படுத்தி வந்த குரங்குகளை முதன்முதலில் அதிகளவில் கொடிகாமம் கரம்பைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த ஆறுமுகம் கண்ணன் என்பவர் தென்மராட்சியில் ஒரே தடவையில் 13 குரங்குகளை பொறிவைத்து பிடித்துள்ளார்.

தென்மராட்சியில் விவசாயப் பயிர்வகைகள் மற்றும் மாமரங்களில் மாங்காய், முருங்கைக்காய், தென்னையில் குரும்பைகள் என பலவகையான பல்லின பயிர்வகைகளையும் நாசம் செய்து பல இலட்ச்சம் ரூபாய் வருமானத்தை இல்லாது செய்து விவசாயிகளுக்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தது.

அத்துடன் வீடுகளின் கூரை ஓடுகள் என்பவற்றையும் உடைத்து நாசமாக்கப்பட்ட நிலையில் தென்மராட்சி வாழ் மக்களாலும், கமக்காரர் அமைப்புக்களாலும் தொடர்சியாக விடுவிக்கப்பட்டு வந்த கோரிக்கையினையடுத்து, வனவிலங்கு அதிகார சபையினரால் விவசாயிகளுக்கு குரங்குகள் பிடிப்பதற்கான பொறிமுறைப் பயிற்சிப்பட்டறை வழங்கப்பட்டு பொறிக்கூடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பொறியில் பிடிக்கப்படும் ஒவ்வொரு குரங்குக்கும் தலா 1000 ரூபாய் வீதம் குரங்கு பிடிப்பவருக்கு வனவிலங்குகள் அதிகார சபையினரால் வழங்கப்படுகிறது. இதனால் குரங்குகளை பிடிப்பதில் இப்பிரதேச விவசாயிகள்,மக்கள்பெரும ஆர்வம்காட்டி வருகின்றனர். (இ-5)

# வெளிநாட்டு வங்கிகளில் ரகசிய கணக்கு இல்லை!

## குற்றச்சாட்டை மறுக்கும் மகிந்த



(கொழும்பு)

**வெளிநாட்டு வங்கிகளில் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் இரகசிய மற்றும் சட்டவிரோத வங்கி கணக்குகள் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சஷ மறுத்துள்ளார்.**

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம அவர் இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிகள் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் சேறு பூசும் வகையில், வெளிநாட்டு வங்கிகளில் இரகசிய வங்கி கணக்குகள் இருப்பதாகவும் இவற்றில் பல பில்லியன் கணக்கான பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் பொய்ப் பிரசாரம் செய்கின்றார்கள்.

இந்த பொய்யான வதந்திகளை ஊடகங்களும் புதுப்பித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த ஆதாரமற்றக் குற்றச்சாட்டுக்களை எனது அரசியல் எதிரிகள் ஆயுதங்களாக பயன்படுத்துவதாக தோன்றுகின்றது. எனக்கோ அல்லது எனது குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ வெளிநாட்டு வங்கிகளில் எவ்விதமான இரகசிய கணக்குகளும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ரயில் மோதி இளைஞன் பலி!

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு ரயில் மோதிய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் உள்ள ரயில் கடவையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 25 தொடக்கம் 30 வயது மதிக்கத்தக்க குறித்த இளைஞன் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

அவர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது எதேச்சையாக ரயிலில் மோதுண்டாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# தவறான அரசியலுக்கு பார்வையாளர்களாக இராது எதிர்கால அரசியலின் பங்காளிகளாக மாறவேண்டும்

## முன்னாள் எம்.பி.குகேந்திரன் சுட்டிக்காட்டு

சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு இளைஞர்களும் தற்போதைய உலக சுழற்சிக்கேற்ப தமது நகர்வுகளிலும் பல புதிய சிந்தனைகளை உள்வாங்குவதனூடாகவே சமூகத்தினதும் இனத்தினதும் எதிர்காலம் கருதிய சிந்தனைச் சுவடுகளை வருங்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்ல முடியும். இதற்காக நாம் அனைவரும் பார்வையாளர்களாக இருந்துவிடாது நீடித்த ஒற்றுமையுடன் பங்காளிகளாக இணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக் கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வு கழகத்தின் வடபுல மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீடித்த போராட்டங்களுக்கு முகம் கொடுத்து இந்த விளையாட்டுக் கழகம் தற்போது விருட்சமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதன் வளர்ச்சிக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியினூடாக எனது பங்களிப்பும் என்றும் உங்களுக்கு இருந்து கொண்டிருக்கும்.

ஒவ்வொருவரதும் ஒற்றுமை யினூடாகத்தான் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகொள்ள முடியும். எமது தேசவிடுதலைப் போராட்டத்தில் சந்தித்த தோல்விகளும் அழிக்கப்பட முடியாத வடுக்களை சுமப்பதற்கு முக்கிய காரணம் எம்மினத்தின் ஒற்றுமையின்மை தான் என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது.

இன்றும் அத்தகைய நிலை தொடர்ந்துகொண்டிருப்பது எதிர்கால தமிழ் இனத்தினது இருப்பிற்கே அது ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற உண்மை நிலையை உணர்ந்து தமிழ் மக்கள் அனைவரும் பிறந்துள்ள இந்த புத்தாண்டிலாவது ஐக்கியப்பட்டு சுய உரிமைகளை பெற்று சுதந்திர மனிதர்களாக வாழ ஒன்றிணையவேண்டும்.

உரிமைப்போராட்ட வரலாற்றில் பங்குகொண்டவர்களும் முள்ளிவாய்க்கால் வரை போராடியவர்களும் அவர்களது குடும்பங்களும் இன்று ஆதரிப்பாரின்றி அநாதைகளாய் வீதிகளில் திரிகின்றனர். அவர்களின் குருதியில் நின்று அரசியல் நடத்துபவர்கள் இற்றைவரை அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொண்டதாக தெரியவில்லை. ஆனால் போராட்டத்திற்கு துளிபங்கு கூட செய்யாதவர்கள் இன்று அரசியற் பதவிக்காய தமக்குள்ளேயே பிரச்சினைகளை தூண்டிவிட்டு குளிர் காயந்து வருகின்றனர்.

கடந்தகாலங்களில் நாங்கள் கற்றுக்கொண்ட துன்பங்களை படிக்கற்களாக்கி இலங்கை அரசுடன் இலங்கை அரசியற் போக்கிற்கேற்ப நாங்களும் பயணித்தால்தான் எமக்கான உரிமைகளை நாம் வெற்றிகொள்ளமுடியும். மாறாக குரோதங்களை வளர்த்துக் கொள்வதனூடாக விளையாட்டுக்களில் மட்டுமல்ல உரிமை விடயத்திலும் எதிர்பார்க்கும் இலக்கை எட்டமுடியாது.

தமிழர்கள் தமது உரிமைப் போராட்டப் பாதையின் பரிணாமத்தில் ஜனநாயக நீரோட்டத்தை உள்வீர்ப்பதனால் தான் ஓரளவேனும் தென்னிலங்கையுடன் ஐக்கியத்தை கொண்டுவரமுடியும். தமிழினத்தின் உரிமையை வெற்றெடுக்க வேண்டுமானால் நாம் அனைவரும் குரோத மனப்பான்மையை களைந்தெறிவதனுடன் நீடித்த நிலையான ஒற்றுமையையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். இதன் மூலம்தான் நாம் விடுதலைப் போராட்டத்திற்காய் கொடுத்த விலைகளுக்கு விடைதேட முடியும்.

எமது எதிர்கால இளைஞர்களாகிய உங்களிடம் நான் கேட்கின்றேன் இதுவரைகாலமும் நீங்கள் இருந்துவந்த திணிப்புக்களிலிருந்து விடுதலைபெற்றுள்ளீர்கள். இனியாவது சுய சிந்தனையுள்ளவர்களாக தவறான அரசியற் போக்கின் பார்வையாளர்களாக இருக்காது நேரான அரசியலுக்கு பங்காளிகளாக ஒற்றுமையுடன் பயணிக்க உங்களை தயாராக்குங்கள். இதுவே தமிழர் எதிர்காலத்திற்கும் விடியலுக்கும் வழிசமைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓரேநாவில் ஐந்து வீட்டில் கொள்ளையர் கும்பல் கைவரிசை

## 51/2 பவுண் நகைகள்;40ஆயிரம்ரூபா பணம் அபேஸ்

(மல்லாவி)

**முழங்காவில் நாச்சிக்குடா பகுதியில் கொள்ளையர் கும்பல் ஒன்று ஐந்து வீடுகளில் கொள்ளையிட நுழைந்த சமயம் ஒரு வீட்டில் மட்டும் பெறுமதியான பொருட்கள் கிடைக்கப்பெற்றதுடன் ஏனைய நான்கு வீடுகளிலும் எதுவித பெறுமதி வாய்ந்த பொருட்களும் கிடைக்காத நிலையில் வெறுங்கையுடன் வெளியேறிய சம்பவம் நடைபெற்றுள்ளது.**

இச்சம்பவம் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாச்சிக்குடா சந்தியில் உள்ள வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் வீட்டில் யன்னல் ஊடாக தடியொன்றை பயன்படுத்தி அறையினுள் வைக்கப்பட்டிருந்த பை ஒன்றை திருடர்கள் வெளியே எடுத்துள்ளனர்.

அதனுள் வைக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் ரூபா பணத்தையும் 5 1/2 பவுண் தங்க நகைகளையும் எடுத்து சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த வீட்டிற்கு அண்மையாகவுள்ள 4 வீடுகளினுள் நுழைந்த திருட்டுக் கும்பல் அறைகளினுள் சென்று அலுமாரிகள் உட்பட அனைத்து பொருட்களையும் சல்லடை போட்டு தேடியுள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் கைகளில் எதுவித பொருட்களும் கிடைக்காத நிலையில் வெறுங்கையுடன் வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வீடுகளின் உரிமையாளர்களால் முழங்காவில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கைரேகை தடயங்களை பதிவு செய்ததுடன் கொள்ளையர் கும்பல் விட்டுச் சென்ற பொருட்கள் சிலவற்றை கைப்பற்றினர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-15)




# வீதிப்புனரமைப்புப் பணியை துரிதகதியில் மேற்கொள்க

### பொதுமக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணீரூற்று 4ஆம் கட்டைச் சந்தியிலிருந்து முறிப்பு குமுழமுனை தங்கபுரம் ஊடாக அளம்பில் சந்தி வரை செல்லும் 14 கிலோ மீற்றர் வீதியானது மக்கள் போக்குவரத்திற்கு பயணிக்கமுடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதாக வாகனச்சாரதிகள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில்தெரியவருவதாவது. வன்னி யுத்தத்திற்கு முன்னர் குறித்த வீதி தார் வீதியாக இருந்த போதிலும் யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலும் தற்போது இவ்வீதியானது குன்றும் குழியுமாக நிறைந்த கிரவல் வீதியாக காணப்படுகின்றது.இவ் வீதியால் குமுழமுனை கிராமங்களைச் சேர்ந்த 750 குடும்பங்களும் முறிப்பைச் சேர்ந்த 125 குடும்பங்களும் தங்கபுரத்தைச் சேர்ந்த 125 குடும்பங்களுமாக சுமார்ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் தினமும் இவ் வீதியால் பயணித்து வருகின்றன.

இவர்களை விட இவ்வீதியினை தண்ணிமுறிப்பு குளத்தின் 2500 ஏக்கர் நிலப் பரப்பிலும் 1500 ஏக்கர மானாவாரி நிலப்பரப்பில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள்,மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் பயணித்து வருகின்றனர். அத்துடன் முல்லைத்தீவு, கொக்கிளாய் பிரதான வீதியை இணைக்கும குறுகிய வீதியாக காணப்படுகின்றது.

இவ்வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் மீண்டும தார் வீதியாக புனரமைப்பு செய்து தருமாறு பொதுமக்கள்.வாகன சாரதிகள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)

# மூன்று மாதங்களில் 872 முறைப்பாடுகள்

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகளில் 95 வீதமான முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், இவ்வருடத்தின் கடந்த 3 மாதங்களில் 872 முறைப்பாடுகள் கிடைத்தன.அவற்றில் 854 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.கடந்த 2012 ஆம் ஆண்டு கிடைத்த 3 ஆயிரத்து 457 முறைப்பாடுகளில் 3 ஆயிரத்து 332 முறைப்பாடுகளுக்கும் 2013 ஆம் ஆண்டு கிடைத்த 3 ஆயிரத்து 976 முறைப்பாடுகளில் 3 ஆயிரத்து 918 முறைப்பாடுகளுக்கும் 2014 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற 3 ஆயிரத்து 17 முறைப்பாடுகளில் 2 ஆயிரத்து 954 முறைப்பாடுகளுக்கும் தீர்வு காணப் பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2)

# சட்டவிரோத மரக்குற்றிகள் மாட்டின பொலிஸாரிடம்

## வாகன சாரதி இருவர் உட்பட நான்கு பேர் கைது



சட்டவிரோதமான முறையில் மன்னாரில் இருந்து கிளிநொச்சிக்கு கடத்திச் செல்லப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த முதிரை மரக்குற்றிகளை நேற்று காலை அடம்பன் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த வாகனங்களை பள்ளமடு சந்தியில் வைத்து பொலிஸார் மறித்து சோதனையிட்டபோது மரங்கள் கடத்தப்பட்டமை தெரிய வந்தது.

மடு காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வெட்ட ப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகளே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்து டன் அவற்றை ஏற்றிச் சென்ற இரு டிப்பர் வாகன ங்களை கைப்பற்றிய பொலிஸார் அதன் சாரதிகள் இருவரையும், வாகனத்தின் உரிமையாளர்கள் இருவரையுமாக நான்கு பேரைக் கைது செய்தனர்.

மரங்கள் உட்பட டிப்பர் வாகனங்களை மன்னார் நீதிமன்றில் ஒப்படைப்பதுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரையும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (2)

# இரணைமடு அம்மன் ஆலய காணியை இராணுவத்திடம் இருந்து விடுவிக்குக

### ஆரிய பரிபாலன சபையினர் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி இரணைமடு அம்மன் ஆலயத்தின் வெளிவீதி மற்றும் இரணைமடுக்குளத்திற்குச் செல்லும் தீர்த்தப் பாதை என்பனவற்றை இராணுவத்திடம் இருந்து பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கனகாம்பிகை அம்மன் ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,ஆலயத்தில் ஐம்பது மீற்றருக்குள் உள்ள வெளி சுற்றுப்பாதை, ஆலயத்தின் முற்றத்திற்கு ஊடாக இரணைமடுக்குளத்திற்கு செல்லும் தீர்த்தப்பாதை, ஆலய வளாகத்தில் உள்ள ஒரு பகுதி காணி என்பன மக்கள் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இராணுவத்தினரால் பயன்படுத்தப்படுகின்றது.

இது ஆலய செயற்பாடுகளுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தி வருவதாகவும் குறிப்பாக திருவிழா காலங்களில் இது பெரும் இடையூறாக இருப்பதோடு வழமை போல் குறித்த வெளி வீதி ஊடாக தேர் வீதி உலா வருவதும் தற்போது இடம் பெறுவதில்லை.

ஆலய முற்றத்திற்கு ஊடாக இரணைமடுக்குளத்திற்குச் செல்லும் பாதையும் இராணுவத்தினரால் வேலியிடப்பட்டு மூடப்பட்டுள்ளதுடன் திருவிழா நேரங்களில் மாத்திரமே திறந்து விடப்படுகின்றது.

ஆலய வளாகத்திற்குள் இடதுபக்கமாகவுள்ள ஒரு துண்டு நிலமும் அதற்குள் இருக்கும் கட்டடமும் இராணுவத்தின் பயன்பாட்டிலேயே உள்ளது.

எனவே இவற்றை மீண்டும் ஆலயத்திற்கு பெற்றுத்தருமாறு ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

# மாடுகள் வீதியை இடைமறித்து செல்வதால் விபத்துக்கள் அதிகரிப்பு

### பயணிகளும் பொதுமக்களும் சுட்டிக்காட்டு

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ-32 பிரதான வீதியில் மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால், போக்குவரத்து சேவைகள் பாதிப்படைந்துள்ளதோடு, விபத்துக்கள் ஏற்படும் நிலையும் தோன்றியுள்ளதாக பயணிகளும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து சேவைகள், குறித்த வீதியூடாக இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் குறித்த வீதியில் நாளாந்தம் காலை மற்றும் மாலை நேரங்களில், பல நூற்றுக்கணக்கான மாடுகள் வீதியை இடைமறித்துக்கொண்டு செல்கின்றன.

இதனால் போக்குவரத்துக்கள் நீண்ட நேரம்தடைப்படுவதோடு மக்கள பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் குறித்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேச செயலகம், மாந்தை மேற்கு பிரதேச சபை உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என பயணிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# பெண் தமிழ் பொலிஸார் பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 5 பொலிஸ்நிலையங்களுக்கும்200 தமிழ் பெண் பொலிஸார் தேவையாகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி, நாச்சிக்குடா, முழங்காவில் , கிளிநொச்சி ஆகிய 5 பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ளன. அவற்றின கீழ் பொலிஸ் காவலரண்கள் பலவும் காணப்படுகின்றன. இந்த நிலையில், பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளனர். இதனால் பெண்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதில காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய 200 பெண் தமிழ் பொலிஸார் தேவை என அவர் மேலும் கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானியங்கி பண இயந்திரங்கள் அமைக்கப்படவில்லை

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் இயங்கி வருகின்ற இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றில் தானியங்கி பண இயந்திரங்கள் (ATM) இது வரை அமைக்கப்படவில்லை. இதனால் வங்கி விடுமுறை நாட்களிலும் வங்கிகளின் கடமை முடிந்த நேரங்களிலும் தமது தேவையின் நிமிர்த்தம் சேமிப்பில் இருந்த பணத்தை மீளப் பெற முடியாத நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இப் பிரதேச செயலகமானது கிளிநொச்சி மாவட்டத்தின் முடிவிடமாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தின் நுழை வாயிலாகவும் அமையப் பெற்றுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் இங்கு குடியேறியுள்ள மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் எதுவாகிலும் வங்கி நடவடிக்கைகள் ஊடாகவே கொடுக்கல் - வாங்கல்கள் நடைபெற்று வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனியார் வங்கிகள் அமைக்கப்படாத நிலையில் அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய இரு வங்கிகளும் தமது சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

வங்கி வாடிக்கையாளர்கள் அதிகரித்து காணப்படும் நிலையில் சேமிப்பில் உள்ள பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்காக மணித்தியாலக் கணக்கில் வங்கிகளில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே மேற்படி வங்கிகள் இதனைக் கருத்தில் கொண்டு வங்கி விடுமுறை நாட்களிலும் வங்கிகள் கடமை முடிந்த நேரங்களிலும் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு தானியங்கி பண இயந்திரங்களை அமைத்துத்தருமாறு பாதிக்கப்பட்டுள்ள வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)






கிளிநொச்சி மாவட்டத்தில் பார்த்தீனியச் செடியின் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிரமதானப் பணி மூலம் அவற்றை பிடுங்கி அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து 7 மணி வரை சிரமதானப் பணி மூலம் பார்த்தீனியச் செடியை அழிக்கும் செயற்பாடு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன் பாக நடைபெற்றதைப் படத்தில் காணலாம். (படம்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# பின்தங்கிய பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி உதவ வேண்டும்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் வன்னிப் பகுதி பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வளப்பற்றாக் குறைகளைத் தீர்ப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

விசேட கல்வி வலயங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலான அரசாங்கத்தின் நடவடிக்கை பாராட்டத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யுத்த சூழ்நிலை காரணமாக கடந்த காலங்களில் வடக்கின் கல்வித்தரம் மிகவும் பின்னடைவு கண்டிருந்த சூழ்நிலையில் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பல்வேறு முயற்சிகளில் படிப்படியாக நாம் ஈடுபட்டிருந்தோம்.

அந்த வகையில் இன்று யாழ்.மாவட்டத்தின் கல்வித்தரமானது நாட்டின் ஏனைய மாவட்டங்களின் கல்வித்தரங்களைவிட திருப்தித்தரக் கூடிய வகையில் உயர்ந்திருக்கிறது.

எனினும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற பகுதிகளின் கல்வி நிலை உயர உரிய அனைத்துத் தரப்பினரும் அதிக அக்கறை கொண்டு செயற்பட வேண்டியுள்ளது.

குறிப்பாக ஆசிரிய வளங்கள் பகிரப்பட வேண்டியது அவசியமாகும். அதேபோன்று ஏனைய வளங்கள் தொடர்பிலும் கவனமெடுத்து செயற்பட்டால் இப்பகுதிகளினதும் கல்வித் தரத்தை கூடிய விரைவில் உயர்த்த முடியுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# மலர் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கலாசார பண்பாட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

பண்பாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வு காலை 9 மணிக்கு துணுக்காய் கமநலசேவை நிலையத்திற்கு செல்லும் சந்தியிலிருந்து பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளான கோலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், கும்மி நடன நிகழ்வுகளுடன் பாரிய இசைக்கருவிகளான தாறை, தம்பட்டங்கள், நாதஸ்வரங்கள் முழங்க விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இதன்போது நினைவு மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் 'மருதோவியம்' எனும் நினைவு மலர் வெளியிடப்படவுள்ளது.

அத்தோடு இப்பிரதேசத்தில் கலைத்துறைக்கு அளப்பெரும் சேவையாற்றிய ஐந்து கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்பிரகாரம் எழுத்துத் துறைக்கு இ.பேரம்பலம், திருமதி. புவனேஸ்வரி சிவபாலன் ஆகியோருக்கும் நாடகத்துறைக்கு ரி.பாக்கியநாதன், மா.இராஜகுலசிங்கம் ஆகியோருக்கும் தொகுப்பு இலக்கியத்துறைக்கு நோர்வே நாட்டில் வசிக்கும் க.சுந்தரலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இயல் இசை நாடக நிகழ்வுகளுடன் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (2-15)

# சைவசமய போட்டிப்பரீட்சை

(வவுனியா)

வவுனியா மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளின் பேரவையானது வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள வவுனியா, செட்டிகுளம், நெடுங்கேணி ஆகிய அறநெறிப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சைவ சமய அறிவினை மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வ/இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் போட்டிப்பரீட்சையொன்றை நடத்தவுள்ளதாக இப் பேரவையின் தலைவர் திருமதி ஜெ.நாகராஜா அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்கு 3 பிரதேசங்களின் 29 அறநெறிப்பாடசாலைகளிலும் இருந்து மத்திய பிரிவிற்கு 346 பரீட்சார்த்திகளும் மேற்பிரிவிற்கு 130 பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 476 பேர் தோற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கு எதிராக வழக்குப்பதிவு

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான மூன்று மாத காலத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் 42 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் பதினொரு பேர் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் புள்ளி விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

2012 ஆம் ஆண்டு 142 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் 38 பேர் விபத்துக்களில உயிரிழந்துள்ளதுடன் 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற 198 விபத்துக்களில் 22 பேர் உயிரழந்துள்ளனர். அத்துடன், 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற 198 விபத்துக்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களில் இடம்பெற்ற விபத்துக்களையடுத்து கடந்த 6ஆம் திகதி, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதேவேளை, வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் விசேட சுற்றுக்காவல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, வீதி ஒழுங்கு விதிகளை மீறிய 7 ஆயிரத்து 125 சாரதிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல், மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில், கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 105 பேரும், கஞ்சாவுடன் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்து காணப்பட்ட சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் கஞ்சா விற்பனை என்பன ஓரளவு கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த 2012ஆம் ஆண்டு, சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக 316 வழக்குகளும் கஞ்சா தொடர்பாக 16 வழக்குகளும் பதிவாகியுள்ளன. அத்துடன் 2013 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபானம் தொடர்பாக 468 வழக்குகளும் கஞ்சா தொடர்பாக 50 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இதே வேளை, 2014ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபானம் தொடர்பாக 499 வழக்குகளும் கஞ்சா தொடர்பாக 64 வழக்குகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இத்தியடி ஸ்ரீ நடன முத்துமாரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இன்று திங்கட்கிழமை விசேட பூசைகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்பிற்கு ஏது எல்லை?

ஒரு ஊருல ஒரு ராஜாவாம். அந்த ராஜாவோட அரண்மனைல ஒரு பட்டத்து யானை இருந்துச்சாம்.

'பட்டத்து யானை'ன்னா என்ன பாட்டி?!

அதாவது, ராஜாவும், ராணியும் ஏறி சுத்தி பார்க்க போறதுக்குன்னு தனியா ஒரு யானையை அரண்மனைல வளர்ப்பாங்க.

ராஜாவுக்கு தர்ற அதே மரியாதையை அந்த யானைக்கும் குடுப்பாங்க.

அரண்மனைல இருந்ததால நல்லா கவனிச்சுப் பாங்க அந்த யானைய. சத்தான சாப்பாடு, உடம்புக்கு முடியலைன்னா டாக்டர்ன்னு இருக்கு.

அப்படி இருந்ததால, அந்த பட்டத்து யானை நல்லா பெரிய தந்தத்தோட, நல்லா கொழுத்து அழகா, கம்பீரமா இருந்துச்சு.

அதுமேல போறதை பெருமையா நினைச்சுப்பார் அந்த ராஜா.


அந்த யானையை கட்டிப்போடுற லாயத்துல ஒரு நாய் ஒண்ணு வந்திருந்துச்சு.

சரியா சாப்பாடு கிடைக்காம அது எலும்பும் தோலுமா இருந்துச்சு.

யானை சாப்பிடும்போது, சிந்துனது சிதறுனதுலாம் சாப்பிட்டு பசியாறுச்சு.

அதைப் பார்த்து இரக்கப்பட்ட யானை, நிறைய சாப்பாட்டை கீழ சிந்த ஆரம்பிச்சுது.

அந்த நாயும் அதையெல்லாம் சாப்பிட்டு நல்லா கொழுகொழுன்னு வர ஆரம்பிச்சுட்டுது.



ரெண்டும் திக் ஃப்ரெண்ட்ஸ் ஆனாங்க.

அரண்மனை சாப்பாடு சாப்பிட்டதால நல்லா கொழுக் மொழுக்ன்னு அழகா மாறிடுச்சு அந்த நாய்.

அரண்மனைக்கு ஏதோ ஒரு வேலையா வந்த பெரிய பணக்காரன் ஒருத்தன் இந்த நாயை பார்த்து ஆசைப்பட்டு பாகன்கிட்ட, என் பசங்க வளர்க்க நாய் வேணுமன்னு ரொம்ப நாளா கேட்டுக்கிட்டு இருக்காங்க.

இந்த நாய் நல்லா இருக்கு.

அதனால, அதை எனக்கு குடு. உனக்கு பணம் தாரேன் ப்ளீஸ்ன்னு கேட்டான்.

பணத்துக்கு ஆசைப்பட்ட பாகன் அந்த நாயை குடுத்துட்டான்.

தன் ஃப்ரெண்டை மிஸ் பண்ணிட்ட யானை, அன்றிலிருந்து சாப்பிடல, சரியா தூங்கலை.

எப்பவும் அழுதுகிட்டே இருந்துச்சு.

இப்படியே நாட்கள் போச்சு.

மெல்ல மெல்ல யானை இளைச்சு, படுத்த படுக்கையா போச்சு.

ஐயோ பாவம் அந்த யானை, பாட்டி.

ஆமாண்டி செல்லம்.

இதை கேள்விப்பட்ட ராஜா அரண்மனைல இருக்குற டாக்டர்களை வரச்சொல்லி யானைக்கு ட்ரீட்மெண்ட் பார்த்தார்.

ராஜா! யானைக்கு எந்த நோயும் இல்ல.

ஏன் இப்படி இருக்குன்னு தெரியலை.

எப்பவும், கூடவே இருக்குற பாகன்கிட்ட கேளுங்க.

அவனுக்குதான் என்னன்னு தெரியும்ன்னு சொல்லிட்டாங்க..

ராஜா யானைப்பாகனை வரவச்சு, என்ன நடந்ததுன்னு உணமையை சொல்லுன்னு மிரட்டுனாரு.

வேற வழியில்லாம அவன், ராஜா! இங்க ஒரு நாய் சுத்திக்கிட்டு இருந்துச்சு.

அதோடதான் நம்ம பட்டத்து யானை விளையாடும், சாப்பிடும், தூங்கும்.

அந்த நாயைப் பணத்துக்கு ஆசைப்பட்டு வித்துட்டேன்.

என்னை மன்னிச்சிடுங்கன்னு சொல்லி அழுதான்.

அந்த நாயை வாங்கி வரச் சொல்லி ஆட்களை அனுப்பினார் ராஜா.

நாயைக் கொண்டு வந்ததும் யானைக்கிட்ட கொண்டு போனார் ராஜா.

யானைக்கிட்ட மெல்ல அசைவு வந்திச்சு.

ஐய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய். யானை நல்லாகிடுமா பாட்டி?!

தன் தும்பிக்கையால நாயை தடவுச்சு யானை.

ரெண்டுத்து கண்ணுலயும் தண்ணி கொட்டுச்சு.

வாயில்லா ஜீவன்களாச்சே! தன்னோட ஃபீலிங்க்ஸை எப்படி சொல்லும்?!

இதை பார்த்த எல்லாரும் வாயடைச்சு போய் நின்னுட்டாங்க.

விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா?!

இனி நாயை, எக்காரணம் கொண்டும் யானைக்கிட்ட இருந்து பிரிக்க கூடாதுன்னு சொல்லிட்டு, இனி பட்டத்து யானை பழைய மாதிரி அழகா, கம்பீரமா மாறிடும்ன்னு நம்பிக்கையோட அரண மனைக்குள் போனார்.

இதிலிருந்து நீங்க தெரிஞ்சுக்க வேண்டியது...

தூய நட்புக்கு இனம், மொழி, உருவம், அந்தஸ்துன்னு எதுவும் தேவை இல்லை. நட்புக்கு எந்த எல்லைக் கோடும் இல்லை.

மனசுல அன்பிருந்தா ஒரு கிளிக்கிட்டயோ இல்ல ஒரு ஆட்டுக் குட்டிட்டகூட நீங்க ஃப்ரெண்டா இருக்கலாம்.




- 1534 - இழ்சாக் கார்ட்டியே தனது கடற்பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தின் போதே அவர் கனடாவைக் கண்டுபிடித்தார்.
- 1653 - ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.
- 1657 - அமெரிக்காவில் நியூ ஆம்ஸ்டர்டாம் (தற்போதைய நியூயோர்க் நகரம்) என்ற டச்சுக் குடியேற்றத்தில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டன் நகரைக் கைப்பற்றும் போர் ஆரம்பமானது.
- 1792 - பிரான்ஸ், ஆஸ்திரியா மீது போரை அறிவித்தது. பிரெஞ்சு புரட்சிப் போர்கள் ஆரம்பித்தன.
- 1859 - சார்ல்ஸ் டிக்கன்ஸ் எழுதிய இரண்டு நகரங்களின் கதை புதினம் வெளியிடப்பட்டது.
- 1862 - லூயி பாஸ்டர் மற்றும் குளோட் பெர்னார்ட் ஆகியோரின் பாஸ்ச்சரைசேஷன் முறையை முதன் முதலாக சோதித்தனர்.
- 1902 - பியேர், மற்றும் மேரி கியூரி ரேடியம் குளோரட்டைத் தூய்மைப்படுத்தினர்.
- 1926 - திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்க படைகள் ஜேர்மனியின் லெயிப்சிக் நகரைக் கைப்பற்றினர். ஆனாலும் அடுத்த நாளே இதனை சோவியத் ஒன்றியத்துக்கு அளித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் லெய்ப்சிக் நகரத் தந்தை தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார்.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் கடைசித் தடவையாக தனது சுரங்க பதுங்கு இருப்பிடத்திலிருந்து வெளியே வந்தார்.
- 1961 - கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவின் பிக்ஸ் விரிகுடாத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது.
- 1972 - அப்போலோ 16 சந்திரனில் இறங்கியது.
- 1998 - 28 ஆண்டுகள் இயங்கிய ஜேர்மனியின் சிவப்பு இராணுவ அமைப்பு என்ற தீவிரவாத அமைப்பு கலைக்கப்பட்டது.

பிறப்புகள்

- 570 - முகமது நபி, இஸ்லாம் மதஸ்தாபகர் (இ. 632)
- 1808 - மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன (இ. 1873)
- 1889 - அடொல்ஃப் ஹிட்லர், ஆஸ்திரியாவில் பிறந்து ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி (இ.1945)
- 1910 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், எழுத்தாளர் (இ. 2006)
- 1918 - காய் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர்
- 1927 - கார்ல் முல்லர், நோபல் பரிசு பெற்றவர்
- 1939 - பிரமீள், ஈழத்து எழுத்தாளர் (இ. 1997)
- 1950 - நா. சந்திரபாபு நாயுடு, இந்திய அரசியல்வாதி

இறப்புகள்

- 1918 - கார்ல் பிரவுன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (பி. 1850)
- 2003 - பேர்னார்ட் காட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு



ரஜினி-குஷ்பு-தர்மத்தின் தலைவன்

...'அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு முன்பு வரை ரஜினி சார் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. படம் பார்த்து, அவருடைய நடிப்பைப் பார்த்த பிறகுதான் அவரைப் பற்றி அறிந்து கொண்டேன். தமிழில் பெரிய சூப்பர் ஸ்டார் என்று சொன்னார்கள்.

பாம்பேயிலிருந்து பெங்களூர் வந்து கன்னடப் படங்களில் நடித்துக்கொண்டிருந்தபோது ரஜினி சார் பற்றி மேலும் பல விடயங்களைத் தெரிந்துகொண்டேன்.

அவர் படங்களைப் பார்த்து ஒரு ரசிகையாக எனக்கு ஏற்பட்ட கிரேஸ், பெங்களூரில் அவரைப் பற்றி தெரிந்து கொண்ட பிறகு அவருடன் சேர்ந்து நடிக்க வேண்டும் என்ற ஆசையாக வளர்ந்தது.

**அழைப்பு**

என் ஆசை நிறைவேறும் சூழ்நிலை வெகுவிரைவிலேயே வந்தது. 'தர்மத்தின் தலைவன்' படத்தில் நடிக்க என்னை அப்ரோச் பண்ணினார்கள். அதில் ரஜினி சார்தான் ஹீரோ என்று தெரிந்ததும் கதையைக் கேட்காமல், சம்பளம் பற்றிக் கவலைப்படாமல் உடனே நடிக்க சம்மதம் சொன்னேன்.

திரையில் பார்த்து வியந்த ரஜினி சாரை நேரில் பார்த்தபோது அவரிடம் ஒரு வசீகரம், ஈர்ப்பு சக்தி இருப்பதை என்னால் உணர முடிந்தது.

அந்தப் படத்தில் நடித்த அனைவருமே சீனியர் ஆர்ட்டிஸ்ட்டுகள். நான் மட்டுமே புதுமுகம். அதில் நடிக்கும்போது நான் புதுமுகம் என்ற பீலிங்கே எனக்கு இல்லை. காரணம் ரஜினி சார் என்னை அந்தளவுக்கு ட்ரீட் பண்ணியது தான். அவருக்கு சமமாக மதித்து என்னுடன் பழகினார்.

தர்மத்தின் தலைவன் படத்தில் ரஜினி சார் ஜோடியாக சுஹாசினி மேடம் நடித்தாங்க. நான் பிரபு சாருக்கு ஜோடியாக நடித்தேன். என்றாலும் ரஜினி சார் காம்பினேஷனில் நிறைய சீன்ஸ் இருந்தன. அந்த சீனில் நடிக்கும்போது ஜாலியாக இருக்கும். காரணம் ரஜினி சார் செய்யும் காமெடிதான்!

தர்மத்தின் தலைவன் படத்திற்குப் பிறகு பல படங்களில் நடித்தேன். ஆனா லும் எனக்கு பெரிய வேலட் வரவில்லை. அது எனக்கு வருத்தமாகவே இருந்தது. 'ரஜினி சாருடன் ஒரு படத்தில் ஜோடியாக நடித்தால் போதும். நீ பெரிய ஸ்டாராகி விடலாம்' என்று சிலர் சொன்னார்கள்.

**அண்ணாமலை**

எனக்கு சான்ஸ் கேட்க தயக்கமாக இருந்தது. நாமாக சான்ஸ் கேட்பதை விட அவராக சான்ஸ் தருவதுதான் பெருமையாக இருக்கும் என்று நான் நினைத்தேன். 'சின்னத்தம்பி' ஹிட்டான பிறகுதான் என் ஆசை நிறைவேறியது.

பாண்டியன், அண்ணாமலை என தொடர்ந்து இரண்டு படங்களில எனக்கு சான்ஸ் கொடுத்தார். 'மன்னன்' படத்தில் நான் நடித்தாலும், பாண்டியன், அண்ணாமலை படங்களில் நடித்ததுதான் எனக்கு பெருமை சேர்த்தது.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் அண்ணாமலை படத்தை என்னால் மறக்கவே முடியாது. பொதுவாக ரஜினி சாருடைய படங்களில் அவருக்கு மட்டும்தான் முக்கியத்துவம் இருக்கும். அண்ணாமலை படத்தில் எனக்கு நிறைய முக்கியத்துவம் கொடுத்தார.

**ஆனந்தக் கண்ணீர்**


'கொண்டையில் தாழம்பூ' பாடலில் என்னுடைய பெயரையும் சேர்த்து பாடலை உருவாக்கினார்கள். படம் வெளிவந்தபோது அந்தப பாடல் காட்சிக்கு கிடைத்த வரவேற்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

அண்ணாமலை படம் வந்த நேரத்தில் நான் எங்கு போனாலும் என் முதுகுக்குப் பின்னால் கொண்டையில் தாழம்பூ பாடல்! அப்படி கேட்கும்போதெல்லாம் மானசீகமாக ரஜினி சாருக்கு நன்றி சொல்வேன்.

**நல்ல மனிதர்**

ரஜினி சார் நல்ல நடிகர் என்றுதான் எல்லாரும் சொல்வார்கள். என் அனுபவத்தில் அவர் நல்ல நடிகர் மட்டுமல்ல. நல்ல மனிதர். அவருடன் சேர்ந்து நடித்தது என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம். இதற்கு ஈடான விடயம் வேறொன்றும் இல்லை. ரஜினி சாரை புகழ வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. என் உள்ளத்தில் இருந்து வரும் உண்மையான வார்த்தைகள் இவை.' இவ்வாறு குஷ்பு கூறியுள்ளார்.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்



**வைரமுத்து-120**

...தோள்பட்ட தையல் மூட்டு பிரிஞ்சு, இதுக்கு மேல என்னியக் கொல்லாத சாமின்னு சர்ரு புர்ருன்னு சத்தம் போட்டிருச்சு. தொத்தக் கொடையக் கையில எடுத்தாரு; இத்த செருப்ப மாட்டிக்கிட்டாரு. சில வருச மாவே சீக்காக் கெடக்கிற செருப்புக ஊசி குத்தாத எடம் ஒரு எடம் பாக்கியில்ல. காதறுந்தும் ஒங்க பேச்ச கேக்கறது நாங்க மட்டுந்தான்; இளிச்சுகிட்டே சோகமாச் சொல்லுதுக செருப்புக.

போயிட்டு வாரேன் கண்ணுகளா... பொழுதிருக்க வந்திடறேன். உருமாப் பெருமாத் தேவருகிட்டே சொல்லிருக்கேன். நாளைக்கி வீட்டளவுல விசேசம் வச்சுக்கிரலாம்.

கவுண்டர் வீட்டுல ஒரு கோழிக்குஞ்சு கடன் கேட்டிருக்கேன். புடிச்ச மாதிரி செஞ்சு குடுங்க புது மாப்பிளைக்கு. நாளைக்கி ஒருபொழுது மட்டும் பொறுத்துக்கச் சொல்லுங்க; கல்யான வீட்டுல கவிச்சி ஆகாது; பொடி நடையாப் புறப்பட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

பொன்னாச்சாரிக பெருத்த ஊரு நிலக்கோட்டை. முப்பது மைல் சுத்தளவுக்கு அங்கதான் எல்லாரும் நகை செய்ய வருவாக. அந்த ஊர் ஆசாரி கிட்ட தொழில் சுத்தமும் இருக்கும்; நேர்மையும் இருக்கும்.

உமி ஒட்டுல ஊதி ஊதிக் கரியக் கங்காக்கிட்டிருந்த அங்காசாரி சுப்பஞ்செட்டியாரப் பார்த்தும் வாய்யா வாய்யா வாய்யான்னாரு வாய் நெறைய.

கடவுளா நெனச்சு வந்திருக்கேன் கைய விட்டிராதையா; பையில கைவிட்டு எடுத்து நீட்டினாரு கருவாச்சி குடுத்த தங்கச் சங்கிலிய.


என்ன பண்ணுவீகளோ ஏது பண்ணுவீகளோ தெரியாது. இன்னைக்கிப் பொழுதுக் குள்ள ஒரு வைரமோதிரம் வேணும். கூலி குடுக்கச் சத்தில்ல குறுக்கொடிஞ்சு நிக்கிறேன். செய்கூலி சேதாரம் இதுலயே கலிச்சுட்டு உள்ளதுக்குச் செஞ்சு குடுங்க ஒரு ஒத்தக்கல்லு மோதிரம்.;

உள்ளங்கையில விழுந்த சங்கிலிய ஒரு புடி புடிச்சபடி புடிச்சுப் பாத்தாரு அங்காசாரி. உள்ளங்கைய மூடிக்கிட்டுக் கண்ணயும் தெறக்காம சொல்றாரு:

செட்டியாரய்யா ஒங்க சங்கிலி மூணு பவுன நெருங்கும். உருக்கினா சுருங்கும்; பொன்னாசாரிக அப்பப்ப தமிழ்லயும் கொஞ்சம் விளையாடிகிருவாக. அரிசியில சிற்பம் செய்யுற மாதிரி பொன்னத் தட்டி பூ வேல செய்யிற மனசா இல்லயா?

ஏனையா நகை சுருங்குதுன்னு எதார்தமாக் கேட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

அம்பில்லாத வில்லும் செம்பில்லாத பொன்னும் வேலைக்காகாது செட்டியாரய்யா. *(தொடரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்போனவர்கள் குறித்து

# ஜனாதிபதிக்கு மட்டுமே ஆணைக்குழு அறிக்கை

### பகிரங்கப்படுத்தப்படாது என்கிறார் பரணகம



ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவிடம் மட்டுமே இந்த அறி க்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

**(கொழும்பு)**

**காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறி க்கை பகிரங்கப்படுத்தப்படமாட்டாது என ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ் வெல் பரணகம தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அனுமதி வழங் கினால் மாத்திரமே குறித்த அறி க்கை பகிரங்கப்படுத்தப்படும் என வும், ஜனாதிபதியின் பார்வைக்கா கவே இவ் அறிக்கை தயார்படுத் தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

இந்த அறிக்கையில் படையினர் மற்றும் தமிழீழ விடுதலை புலிகள் இழைத்த தவறுகள் குறித்து தெளி வாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்வதற்கு விசாரணைக்குழு வொன்று அமைக்கப்பட வேண் டும் என பரிந்துரை செய்யப்பட் டுள்ளது.

இதற்காக அனுபவம் வாய்ந்த ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பை பெற்று இவ்விசாரணைக்குழு அமை க்கப்பட வேண்டும் என மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஜே.வி.பியும் ஆதரவு வழங்கும்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு நாம் ஆதரவளிப் போம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் தொடர் பில் சில நல்லவிடயங்களுக்கு ஆதரவளிக்கும் நடைமுறையின் அடிப்படையில் 19ஆவது திருத் தத்தில் குறைபாடுகள் இருந்தாலும் அதனை ஆதரவளிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்துக்கு ஆதர வளிக்குமாறும் அவர், ஏனைய கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்து ள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற் றத்தை ஏற்படுத்துவதற்கான 20 ஆவது திருத்தத்துடன் 19 ஆவது திருத்தத்தை போட்டு முரண்பட்டு கொள்ளவேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகளை உள்ளடக்கி தயா ரிக்கப்பட்டுள்ள சட்டமூல திருத்தம் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகை யால் அதனை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சகல கட்சிகளின் யோச னைகளுக்கு அமைவாக தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்ப டுத்துவது குறித்து தீர்மா னிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித் தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யின் தலைவர் என்றமைக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யோச னைகளுக்கு அனுமதியளிக்க முடி யாது. அவர், சுதந்திரகட்சிக்கு பொறுப் பளிப்பதற்கு அப்பால், அவருக்கு வாக்களித்த 62 இலட்சம் மக்களுக் காக அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் செயற்படவேண்டும் எனறும் அவர் தெரிவித்தார். (இ-5)

# போதையில் சாரதிகள் 1815பேர் கைதாகினர்

மதுபோதையில் வாகனம் செலு த்திய 1,815 சாரதிகள் கடந்த ஆறு நாட்களில் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான நடவடிக்கை கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நேற்று முன்தினம் 18 ஆம் திகதி சனிக்கி ழமை காலை 6 மணி வரையி லான எட்டு நாட்களிலேயே 1,815 சாரதிகள் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணித தியாலங்களில் மட்டும் மதுபோ தையில் வாகனம் செலுத்திய 205 சார திகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 1,815 சாரதி களில் லொறி சாரதிகள் 52 பேர், தனியார் பேருந்து சாரதிகள் எழு வர், இலங்கை போக்குவரத்து சபை க்கு சொந்தமான பேருந்து சாரதி யொருவர், வான் சாரதிகள் 29பேர், கார் சாரதிகள் 53 பேர், ஆட்டோ சாரதிகள் 645 பேர், மோட்டார் சைக்கிள் சாரதிகள் 996 பேர் அட ங்குவதாகவும் ஏனைய 32 சாரதி கள் இதரவாகனங்களின் சாரதிகள் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-5)

# வனுவாடு குடியரசுக்கு 50,000 அமெ.டொலர்

(கொழும்பு)

கடந்த மாதம் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வனுவாடு குடியர சுக்கு 50,000 அமெரிக்க டொலர் நிதியை இலங்கை வழங்கியுள் ளது.

அவுஸ்திரேலியாவுக்கான பதில் உயர்ஸ்தானிகர் பி. செல்வராஜ். கான்பராவில் அமைந்துள்ள வனு வாட்டு உயர்ஸ்தானிகரை நேற்று முன்தினம் சந்தித்து இந்நிதிக்கான காசோலையை வழங்கினார் என அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் வழங்கப்பட்ட இந் நிதியுதவியை பாராட்டிய வனு வாட்டு உயர்ஸ்தானிகர் இருநாடுக ளுக்கிடையிலான உறவு மேலும் மேம்பட இதுவொரு சந்தர்ப்பமாக அமையும் என தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)







யாழ். மல்லாகம் மகாவித்தியாலயமும் குருணாகல் மாவத்தகம மத்திய மகாவித்தியாலயமும் இணைந்து "அன்பின் கல்விக்கூடம்" எனும் கருப்பொருளில் மாவத்தகம வித்தியாலய அதிபர் எம்.டபிள்யூ. ஜி.ஹேரத் தலைமையில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஒன்றுகூடல் மற்றும் கலை நிகழ்வுகளின் போது...

# ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு நிதியுதவி வழங்கும் ஜப்பான்

காணாமற் போனவர்கள் தொட ர்பிலான ஆணைக்குழுவிற்கு ஜப் பான் அரசாங்கம் நிதி உதவிகளை வழங்க தீர்மானித்துள்ளது.

ஜப்பானிய தூதரகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது என ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ. குணதாச ஆங்கில வார இதழொன் றுக்கு வழங்கிய செவ்வியில் தெரி வித்துள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர் பில் கண்டறிவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறுவிய ஆணைக்குழுவிற்கு மெக் ஸ்வெல் பரணகம தலைமை தாங் குகின்றார்.

வட, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோ சனை வழங்கும் திட்டத்திற்கு ஜப் பானிய தூதரகம் நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நிதி உதவிகளை வழங்குவது குறித்து இவ்வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் குடு ம்ப உறுப்பினர்கள் மனோரீதி யான பாதிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவார ணங்களை வழங்கவும் ஆலோ சனைகளை வழங்கவும் 80 மில் லியன் ரூபா தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி தூதரக அதிகாரிகளுடன் இது குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்தப் படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ. குணதாச தெரிவித்துள்ளார்.

இதன்படி வட, கிழக்கை பிரதிநி தித்துவப்படுத்தும் 79 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 21 ஆயி ரம் குடும்பங்களுக்கு இவ்வாறு ஆலோசனை திட்டங்களை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# முத்தமிட முயன்ற கான்ஸ்டபிள் 2 லட்சம் பிணையில் விடுவிப்பு

புளத்கொஹூபிட்டிய பிரதேசத் திலிருந்து பேராதனை வைத்திய சாலைக்கு பணிக்குச் சென்று கொண் டிருந்த பெண் மருத்துவ உதவி யாளர் ஒருவரை கட்டியணைத்து முத்தமிட்ட முயன்றதாக கூறப்படும் கேகாலை பொலிஸ் நிலைய போக் குவரத்துப் பிரிவு கான்ஸ்டபிள் இரண்டு இலட்சம் ரூபாய் பெறும தியான பொலிஸ் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கேகாலை பதில் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆஜர்ப டுத்தப்பட்டார். உதுகொட, உடயட்டி தெரிய பிரதேசத்தைச்சேர்ந்த சமன் புஷ்பகுமார என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடமைக்கு செல்வதற்காக புளத் கொஹூபிட்டிய பிரதேசத்தில் கடந்த 17ஆம் திகதி நடந்து வந்துகொண்டி ருந்த மேற்படி பெண் மருத்துவ உதவியாளரை, ஆட்டோ ஒன்றுக் குள் இழுத்துக்கொள்ள குறித்த கான்ஸ்டபிள் முயற்சித்துள்ளார்.

இருப்பினும், அம்முயற்சி பய னளிக்காத நிலையில் அந்த மருத் துவ உதவியாளரை கட்டியணை த்து முத்தமிட்டுள்ளதுடன் பலவந்த மும் செய்ய முற்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொணடு வருகின்றனர் என்பது குறிப்பி டத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி பக்கம் விமல் வீரவன்ச!

## பொன்சேகா எதிர்வு கூறல்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்து விரைவில் விமல் வீரவன்ச புகழ்பாடுவார் என ஜனநாயக கட்சித் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கட்சி செயற்பாட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடும் சந்தர்ப் பத்தில் அவர் இவ்வாறு தெரி விததார்.

நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தன் வயிற்றை குறித்து மாத்திரம் சிந்தக்கும் ஒருவரே விமல் வீரவன்ச என அவர் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தனிப்பட்ட இலாபத்திற்காக எவ்வாறு வேண்டுமென்றாலும் பொய் சொல்லக் கூடிய ஒருவராவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு போன்றே பிரதமர் ரணில் விகரமசிங்கவிற்கும் விரைவில் புகழ்பாடுவார்என்பது புதுமைபட வேணடிய விடயமல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவின் தோல்விக்கு பின்னால் விமல்

### விஜித முனி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பொறுப்பு கூறவேண்டும் என நல் லாட்சி அமைச்சர் விஜித முனி சொய்சா தெரிவித்துள்ளார்.

பிபில பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவின்றி விமல் வீரவன்ச போன்றோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என அவர் தெரிவித்தார்.

தோல்வியடைந்தாலும் மக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவிற்கு செல்வாக்கு உள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களின் அன்பு முழுமையாக மகிந்தவிற்கு மாத்திரமே காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சு.க. மேதினக் கூட்டங்களில் மகிந்த பங்கேற்கமாட்டாராம்

மே தினக் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மே தினக் கூட்டத்திலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பு ஹைட் மைதானத்திலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எட்டு கட்சிகள் இணைந்து கிருளப்பனையிலும் மே தினக் கூட்டங்களை நடத்தவுள்ளன.

மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாபா அண்மையில் உத்தியோக பூர்வமாக மகிந்தவிற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருவதாகவும், இந்த அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதனால் தாம் மேதினக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என மகிந்த அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில கட்சிகள் கிருளப்பனையில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 50 | 50-60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 50 | 30-40 | 40 |
| தக்காளி | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 45 | 60 | 40 | 40 |
| கோவா | 50 | 30 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 120 | 140 | 100 | 140 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 70 | 80 | 80-100 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 100 | 100 | 80 | 80-100 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 40 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 80 | 90 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 70 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 220 | 200 | 150 | 200 | 240 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 80 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 600 | -- | 600 | 400-450 | 450 |
| போஞ்சி | 200 | 150 | 100 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 30 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 120 | 120 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50-60 | 50 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 80 | 100 | 100 | -- | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | -- | 40 | 30 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 346

Search for people, places and things Nagendram Home

சுஜே செல்வா





திலீப் குமார்





சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்




கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு தந்த அதிர்ச்சி!

## ஜெ.வின் அடுத்த ஆபரேஷன் வெற்றி!

எங்கோ உருவாகும் காற்றழுத்தம் தமிழகத்தில் மழையைப் பொழிய வைப்பதைப் போல ஜெ.வுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கிய கடந்த புதன்கிழமை ஒட்டு மொத்த தமிழகமே பரபரப்பில் இருந்தது.

தீர்ப்பு, மதியம் 1:30 மணிக்கு என அறிவிக்கப்பட்டிருந்தாலும் 11 மணிக்கே நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்கள் குவிய ஆரம்பித்தனர். தீர்ப்பை வழங்கும் நீதியரசர்கள் மதன்லோகூர் மற்றும் பானுமதி ஆகியோர் அமரும் கோர்ட் எண். 9இற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அந்தக் கோர்ட்டுக்குள் அனுமதி சீட்டு இல்லாமல் நுழைய முயன்றவர்களைத் தடுத்து நிறுத்த பாதுகாவலர்கள் கடினமாகப் போராடிக் கொண்டிருந்தார்கள்.


கோர்ட் ஹாலுக்குள் திரண்டிருந்த தி.மு.க. வழக்கறிஞர்கள் கலகலப்பாக பேசிக்கொண்டிருக்க... ஜெ. தரப்பு வழக்கறிஞர்கள் மத்தியில் சிறிய புன்னகை கூட இல்லை. சைலன்ட்டில் வைக்கப்பட்டிருந்த அவர்களது அலைபேசியில் ப்ளாஷ்லைட்டில் வந்த நம்பர்களை பார்த்துவிட்டு கோர்ட்டுக்கு வெளியே ஓடி பெரிய பதட்டத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். கலகலப்புக்கும் டென்ஷனுக்கும் காரணம் வரப்போகும் தீர்ப்பு அவர்களுக்கு தெரிந்திருந்ததுதான்.



தலைமை நீதிபதி தத்து



நீதிபதி குமாரசாமி



நீதியரசர் லோகூர்



நீதியரசர் பானுமதி

### தனித்தனி முடிபு!

சுப்ரீம் கோர்ட்டில் இரண்டு நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச், தீர்ப்பளிக்கும்போது இரண்டு நீதிபதிகளும் தாங்கள் எழுதிய தீர்ப்புகளை முன்கூட்டியே தங்களுக்குள் பரிமாறிக் கொள்வார்கள். ஒரு நீதிபதி எழுதிய தீர்ப்பை இரண்டாவது நீதிபதி ஒத்துக்கொள்வாரானால், 'நான் உங்களது தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன்' என தெரிவிப்பார். அதில் ஒருசில திருத்தங்களை சேர்த்தால் நன்றாக இருக்கும் என இரண்டாமவர் நினைத்தால் அதைப்பற்றி இருவரும் விவாதித்து முடிவெடுப்பார்கள்.




தி.மு.க வழக்கறிஞர் சண்முகசுந்தரம்

புதன்கிழமை வழங்கவேண்டிய தீர்ப்பை முழுமையாக எழுதி, சனிக்கிழமை இரவே ஜூனியர் நீதியரசர் பானுமதிக்கு அனுப்பி வைத்தார் சீனியர் நீதியரசரான மதன்லோகூர். இதுவரை சீனியர் நீதிபதி சொல்லும் கருத்தை பெருமளவு மறுக்காமல் ஏற்றுக்கொள்ளும் பானுமதி, பவானிசிங் நியமனம் தொடர்பாக லோகூர் எழுதிய கருத்துகளுக்கு உடன்படவில்லை. 'எனக்கு இதில் மாற்றுக்கருத்து இருக்கிறது' என பானுமதி கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த லோகூர், 'நான் எனது தீர்ப்பை தனியாக அறிவிக்கிறேன்' என சுப்ரீம் கோர்ட் பதிவாளருக்கு குறிப்பு அனுப்பிவிட்டார். புதன்கிழமை நீதியரசர் லோகூர் தீர்ப்பளிப்பார் என சுப்ரீம் கோர்ட் அறிவித்தது.

பொதுவாக இரு நீதிபதிகள் அடங்கிய பெஞ்சில் சீனியர் நீதியரசர் தீர்ப்பளிப்பார் என பதிவாளர் அறிவித்தால், அது இரு நீதிபதிகள் ஒற்றுமையாக அளிக்கும் தீர்ப்பு என்றுதான் புரிந்து கொள்ளப்படும். அந்த நடைமுறையை மீறி திங்கள்கிழமை இரவு நீதியரசர் பானுமதி தனியாக தீர்ப்பு தரப் போவதாக பதிவாளருக்கு குறிப்பு அனுப்பிவிட்டார்.



பவானிசிங்



தி.மு.க வழக்கறிஞர் குமார்

செவ்வாய்க்கிழமை காலை இந்த அறிவிப்புகளைப் பார்த்த ஜெ. வழக்கறிஞர்கள் அதிர்ச்சியுடன் செவ்வாய் இரவு போயஸ் கார்டனை தொடர்புகொண்டு விபரத்தைச் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்ற நீதிபதி சதாசிவத்துக்கு, சென்னையில் அன்றைய முதல்வர் ஜெ. தலைமையில் நடந்த பாராட்டு விழாவில் கலந்துகொண்ட அன்றைய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பானுமதி, ஜெ.வை அம்மா, புரட்சித் தலைவி என பாராட்டியதை... நினைத்தபோது, இரண்டு தீர்ப்புகள் வரப்போகிறது என்பதை உணர்ந்தோம்' என்கிறார் தி.மு.க. வழக்கறிஞர் சரவணன்.



அ.தி.மு.க.வினரின் மன நிலையை புதன்கிழமை சுப்ரீம் கோர்ட் வளாகத்திற்கு வந்திருந்த எம்.பி.நவநீதகிருஷ்ணன், மணி சங்கர் ஆகியோர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்ததிலிருந்தே அறிய முடிந்தது.

### தீர்ப்பு விபரம்!

கோர்ட்டில் தீர்ப்பு வழங்கும்போது பேராசிரியர் அன்பழகன் தரப்பில் வாதாடிய சீனியர் வழக்கறிஞர் அந்தி அர்ஜுனாவிற்கு உதவி புரிந்த தி.மு.க. வழக்கறிஞர் சண்முகசுந்தரம் கைகொடுக்க... அந்திஅர்ஜுனா அவரது கன்னத்தில் தட்டிக் கொடுத்தார். 'அதற்கு ஒரு காரணம் இருந்தது' என்கிறார் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் வழங்கும் தீர்ப்புகளை மிக அருகில் இருந்து கவனித்து... மிகச்சரியாக பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கும் மூத்த பத்திரிகையாளர் வெங்கடேசன். நீதிபதிகள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதை அந்த வழக்கில் ஆஜராகும் சீனியர் வழக்கறிஞர்களே கேட்டு தெரிந்து கொள்ளும் அளவிற்கு வழக்கு விபரங்களை கூர்ந்து கவனித்து வருவதில் திறமை பெற்ற வெங்கடேசன் நம்மிடம், 'சீனியர் நீதிபதியான லோகூர்தான் தீர்ப்பை முதலில் படித்தார். கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஜெ.வுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராக செயறபட்ட பவானிசிங், சட்டப்படி முறையாக நியமிக்கப்படவில்லை. அதனால் அவரது வாதத்துடன் நடைபெற்ற இந்த அப்பீல் வழக்கு முழுவதும் தவறாக நடைபெறுகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் செப்டம்பர் 27 ஆம தீகதி சனிக்கிழமை ஜான் மைக்கேல் டி குன்ஹா தீர்ப்பளிக்கிறார். அதற்கடுத்த இரண்டாம் நாளான 29 ஆம தீகதி திங்கள்கிழமை பவானிசிங்கை அரசு வழக்கறிஞராக, தன்னிச்சையாக தமிழக அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை நியமிக்கிறது. 30 ஆம் தீகதி ஜெ. ஜாமீன் மனுவை தாக்கல் செய்கிறார். அதில் தானாக முன் வந்து ஆஜராகும் பவானிசிங், 'எனக்கு எந்த உத்தரவும் வரவில்லை' என்கிறார். அவர் அந்த வழக்கில் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வமான வாதத் தில் 'ஜெ.வுக்கு ஜாமீன் கொடுக்கக்கூடாது' என எழுதிக் கொடுக்கிறார். ஒருவாரம் கழித்து இன்னொரு நீதிபதி முன்பு விசாரணைக்கு வந்த ஜாமீன் வழக்கில், 'ஜெ.வுக்கு ஜாமீன் வழங்க எந்த ஆட்சேபனையும் இல்லை' என்கிறார்.

ஜான் மைக்கேல் டி குன்ஹாவின் கோர்ட்டில் கர்நாடக அரசின் உத்தரவுடன் ஆஜரான பவானிசிங், கர்நாடக அரசிடம் ஊதியம் பெற்றார். அப்பீல் வழக்கில் ஆஜரான பவானிசிங், தமிழக அரசிடம் ஊதியம் பெற்று வாதிடுகிறார். அவரது நடவடிக்கை முழுக்க சந்தேகத்தை எழுப்புகிறது.

குற்றவாளியான ஜெ., தனது அதிகார பலத்தை, பண பலத்தை பயன்படுத்தி 15 வருடங்களாக வழக்கை காலதாமதம் செய்தார்' என பேராசிரியர் அன்பழகன் சொல்வதை ஏற்றுக்கொண்டால் அதிகாரமும் செல்வாக்கும் ஒரு வழக்கில் நீதி வழங்கு வதை எப்படி தடை செய்யும் என்பதற்கு இந்த வழக்கு ஒரு சிறந்த உதாரணம். அன்பழகன் சொல்வது தவறு என்றாலும்கூட ஒரு கிரிமினல் வழக்கு முடிய 15 வருடமாகிறது என்பது மிகவும் துரதிருஷ்டவசமானது.

(தொடரும்)

-யூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுடன் இணையமாட்டேன்

## சோமவன்ச தெரிவிப்பு


(கொழும்பு)

ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்படப் போவதில்லை என முன்னாள் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தோல்வியடைந்த ராஜபக்ஷ சக்திகளுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை.

விரிவான அரசியல் சக்தியொன்றுடன் இணைந்து கொள்ளுமாறு விடுக்கப்படும் அழைப்புக்களை ஏற்றுக்கொள்ளப் போவதிலலை.

எந்தக் காரணத்திற்காகவும் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி தோல்வியடைந்த ராஜபக்ஷ குழுவினருடன் இணைந்து கொள்ள மாட்டேன்.



ஜே.வி.பி.யிலிருந்து விலகி மற்றுமொரு அரசியல் கட்சியொன்றுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியமில்லை.

புதிய அரசியல் கட்சியொன்றை அமைப்பது குறித்து தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் கட்சியொன்றை உருவாக்கி, ஜே. வி. பிக்கும் அதன் மூலம் வழிகாட்டப் போவதாக சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.


கொழும்பு இணையத்தளமொன்றுக்கு தொலைபேசி மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# அரசியல் ஸ்திரத்தன்மையை பேண பொதுத்தேர்தலை நடத்தவேண்டும்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என நீதியான மக்கள் அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**



உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஸ்திரமான ஓர் அரசாங்கம் நாட்டுக்கு அவசியப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டின் அரசியல் சூழ்நிலை ஆரோக்கியமான முறையில் அமையவில்லை. எனவே உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது.

நாட்டில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சோபித தேரர் சிங்கள ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-5)

# 19ம் திருத்தம் குறித்து சுயாதீன தீர்மானம்

## 62 உறுப்பினர்கள் அறிவிப்பு

19 ஆவது திருத்தச் சட்டம் குறித்து சுயாதீனமான தீர்மானம் எடுக்கப் போவதாக 62 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

தினேஸ் குணவர்தனவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமென கோரிகையொப்பம் இட்டவர்களே இந்தக் குழுவில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தக் குழுவினர் நாளை கூடி ஆராய்ந்து இது குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளனர். 19ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகின்றது.

எனவே இந்த குழுவினர் 19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்கின்றார்களா இல்லையா என்ற அடிப்படையிலேயே 19ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கம் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## இலங்கை-சீன பாதுகாப்பு தொடர்புகள் விஸ்தரிப்பு

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதன் பொருட்டு சீனாவின் இலங்கைக்கான தூதுவர், இராணுவத் தளபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் இராணுவத்தினர் சீனாவில் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இராணுவத் தொடர்புகளை மேலும் அதிகரித்துக் கொள்ளும் வகையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. (இ-5)

# ஓய்வூதியர்களுக்கு மீண்டும் தொழில்வாய்ப்பு

ஓய்வூதியம் பெற்றுக்கொண்டவர்களுக்கு மீளவும் தொழில் வாய்ப்புக்களை வழங்க ஓய்வூதியக் கொடுப்பனவு திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

ஓய்வு பெற்றுக்கொண்டவர்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களை சேவையில் மீளவும் ஈடுபடுத்த, நடவடிக்கை எடுக்கப்படும் என ஓய்வூதியக் கொடுப்பனவு ஆணையாளர் நாயகம் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த திட்டம் சாதகமான பலன்களை அளிக்கும் என்பதுடன் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டவர்கள் தனிமைப்படுத்தப்படுவதனையும் தடுக்க முடியும். மற்றும் அனுபவம், நிபுணத்துவம் போன்றவற்றினை காத்திரமான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி அல்லலுறுகின்றமையும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வேண்டும் விஞ்ஞான மனப்பான்மை

எல்லோரும் விஞ்ஞானிகளாக வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் எல்லோருக்கும் ஒரு விஞ்ஞானியின் மனப்பான்மை இருக்க வேண்டும். அப்படி இருக்கும் மனிதர்கள்தான் சாதனைகளைப் படைத்திருக்கின்றனர். வெற்றிகளை குவிக்கின்றனர். இந்த மனப்பான்மைதான் பிரச்சினைகளைச் சரியாகப புரிந்துகொள்ளவும் அதற்குச் சரியான தீர்வு காணவும் ஒவ்வொருவருக்கும் உதவுகிறது. சுருக்கமாகச் சொன்னால் ஏன்? எதற்கு? என்ற வினாக்களை ஒருவனுக்குள் எழுப்பி அதற்கான விளக்கத்தை அவனிடமிருந்து பெற்று வெற்றிக்கு அடிகோலுவதே இந்த விஞ்ஞான மனப்பான்மைதான்.

தமிழில் பார்த்தல், கவனித்தல் என்ற வார்த்தைகள் உண்டு. பார்த்தல் என்பது மேலோட்டமாக, தற்செயலாக நிகழ்வது. கவனித்தல் என்பது இது ஏன் இப்படி இருக்கிறது இது எப்படி இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி மனப்பான்மையோடு ஒன்றைப் பார்ப்பது.

உதாரணமாக அப்பிள் பழம் மரத்திலிருந்து கீழே விழுகிறது. எல்லோரும்தான் அதைப் பார்க்கிறார்கள். ஆனால் ஒரே ஒருவர் மட்டும்தான் அதை வெறுமனே பார்க்காமல் கவனித்தார். அவர் தான் சேர் ஐசாக் நியூட்டன். மரத்திலிருந்து விடுபட்ட இந்தப்பழம் ஏன் கீழ்நோக்கி வரவேண்டும் என்று யோசித்ததோடு 'ஏன் அந்தப்பழம் மேல் நோக்கிப் போகவில்லை?' என்று பார்த்தவர்கள் சொன்னார்கள். ஆனால் நியூட்டன் அந்தப் பதிலை ஏற்காமல் ஆராய்ந்ததால் உலகிற்கு புவிஈர்ப்பு விசைத் தத்துவம் கிடைத்தது.

நீர் கொதிக்கும் பாத்திரத்தின் மேல் மூடி நீராவியால் அசைக்கப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஜேம்ஸ் வோட் என்ற சிறுவன் அதைக் கவனித்து நீராவிக்கு பொருட்களை இயக்கும் தன்மை உண்டு என்பதைக் கண்டுபிடித்தான். அதன் பயனாகத்தான் நீராவி இயந்திரங்கள் தோன்றின.

பார்த்தலுக்கும் கவனித்தலுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள ஒரு வேடிக்கை நிகழ்ச்சியைப் பார்ப்போம். ஒரு பாடசாலையில் அறிவியல் ஆசிரியர் மாணவர்களின் கவனிக்கும் ஆற்றலை கவனிக்க ஒரு சோதனை நடத்தினார். ஒரு குடுவையில் அசிட்டை எடுத்துக் கொண்டார். அதை நாக்கில் தொட்டு வைத்தால் சில விநாடிகளுக்கு அது எரிச்சலைத்தரும். 4 மாணவர்களை அழைத்து அதை நாக்கில் தொட்டு வைக்கச் சொன்னார் ஆசிரியர். அவ்வாறே செய்த மாணவர்கள், பயங்கரமாக எரியுது சேர் என்றனர். அதற்கு மேல் அது ஒன்றும் செய்யாது என்ற ஆசிரியர், இப்போது நான் நாக்கிலே தொட்டு வைக்கிறேன் என்று சொல்லி அப்படியே வைத்துவிட்டு எனக்கு ஒன்றும் எரிச்சல் உணர்வு தோன்றவில்லையே என்றார். அது எப்படி சேர், நாங்கள் நாக்கில் தொட்டு வைக்கும்போது ஏற்பட்ட எரிச்சலை எங்களால் தாங்க முடியவில்லை. உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லை என்கிறீர்களே? பொய் சொல்லாதீர்கள் என்றனர்.

அப்போது ஆசிரியர் சொன்னார் நான் பொய் சொல்லவில்லை, நீங்கள் தான் கவனிக்கும் ஆற்றலை இழந்துவிட்டீர்கள். நான் என் ஆள்காட்டி விரலால் அசிற்றை தொட்டேன். ஆனால் என் நடுவிரலைத்தான் நாக்கில் வைத்தேன். இதை நீங்கள் கவனிக்கவில்லை.

ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என்ற ஆசை வந்தவுடன் உணர்ச்சி வேகத்தில் அதைச் செய்ய ஆரம்பிக்காமல் இதை ஏன் செய்ய வேண்டும் என்று நிதானமாக யோசிக்க வேண்டும்.

இதன்மூலம் அந்தக் காரியம் அவசியமில்லை. அவசரப்பட்டு அதைச் செய்ய வேண்டியதில்லை. போதுமான தயாரிப்புகளுடன் தான் அதைத் தொடங்க வேண்டும் என்பது போன்ற சிந்தனைகள் உங்களிடம் உருவாகலாம். அப்போது பாதைகள் படிக்கட்டுகள் ஆகி விடுவதால் ஒவ்வொரு படியாக நிதானமாக உங்களால் மேலே செல்ல முடிகிறது. விஞ்ஞான மனப்பான்மையின் முதல் பாடம் எதைச் செய்தாலும் திட்டமிட்டு செய்ய வேண்டும் என்பதாகும். இது ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். இல்லையெனில் இப்படித்தான் ஆகும்.

ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி பீடத்திற்கு ஒரு மாணவன் சென்று விஞ்ஞானியிடம் என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள்? என்று கேட்டான். எந்தப் பொருளையும் கரைத்துவிடக் கூடிய திரவத்தைக் கண்டுபிடிக்கப்போகிறேன் என்றார் அவர். அப்படியானால் அந்தத் திரவத்தை எந்தப் பொருளில் பாதுகாத்து வைப்பீர்கள் என்று மாணவன் கேட்க விஞ்ஞானி யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சிம்ம குருவின் பார்வையால் செல்வ நிலை உயரும்!**

**சொல்லும் சொற்களை எல்லாம் வெல்லும் சொற்களாக மாற்றும் விருச்சிக இராசி நேயர்களே!**

தனாதிபதி குரு உச்சம் பெற்றும், ராசிநாதன் செவ்வாய் தொழில மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியுடனும் இணைந்து செயற்படும் அமைப்பில் இந்த புத்தாண்டு தொடங்குவதால் உங்கள் தொழில் வளம் மேலோங்கும். உங்கள் ராசி நாதன் செவ்வாய் என்பதால் தன்னம்பிக்கையும், தைரியமும் உங்களுக்கு தக்க துணையாக இருக்கும். தெய்வீக சிந்தனை அதிகம் உண்டு. வெற்றி ஒன்றையே உங்கள் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவீர்கள்.

**குரு பார்க்க கோடி நன்மை!**

பார்வையால் பலன் கொடுக்கும் குரு பகவான், ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்தில் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். தனபஞ்சமாதிபதி உச்சம் பெற்று உலா வரும் இந்தப் புத்தாண்டில் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். பாராட்டும், புகழும் கூடும்.

பொன்னும், பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகி இயல்பாக வளம் கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களை நாள் தோறும் கொண்டு வந்து சேர்ப்பர். குடும்பத்தில் குதூகலம் கூடும்.

ஞானகாரகன் கேது பஞ்சம ஸ்தானத்தில் வீற்றிருக்க பஞ்சமாதிபதி உச்சம் பெற்று விளங்குவதால் பத்திரிகைத் துறை, எழுத்துத் துறை, கலைத்துறை, ஜோதிடத்துறை, ஆன்மிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்தப் புத்தாண்டு ஒரு பொன் கொழிக்கும் ஆண்டாக அமையும். கடல் வணிகம் செய்பவர்களும் காகிதத் தொழில் புரிபவர்களும் கை நிறையப் பொருள் குவிப்பர்.

ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் உங்களுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்களைப் பொறுத்தவரை சனி சகாய ஸ்தானாதிபதியாக விளங்குவதால் எல்லா விதங்களிலும் உங்கள் சகாயங்கள் வந்துசேரும்.

தொழில் ஸ்தானாதிபதி சூரியனோடு ராசிநாதனும், லாபாதிபதியும் இணைந்து சஞ்சரிப்பதால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. அரசு வழிச் சலுகைகளும் கிடைக்கும்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிவதோடு 3, 5 ஆகிய இடங்களிலும் பதிவது யோகம் தான். குருவின் பலத்தோடும், குரு ஓரையிலும், குரு சந்திர யோகத்தோடும் ராசிநாதன் செவ்வாய்க்குரிய தெய்வமாக விளங்கும் முருகபெருமானின் வாகனமான மயில் நடைபயிலும் பஞ்ச பட்சி நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகின்றது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

'பொன்னவன்' என்றும், 'மன்னவன்' என்றும் வர்ணிக்கப்படுகின்ற குரு எந்தெந்த இடத்தைப் பார்க்கிறதோ, அந்த இடங்களில் ஆதிபத்யமெல்லாம் வளர்ச்சியடையும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது கடக குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் உடல்நலம் சீராகும். உற்சாகம் குடிகொள்ளும். வாங்கல்-கொடுக்கல்களில் திருப்தி ஏற்படும். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும்.

மூன்றாமிடத்தை குரு பார்ப்பதால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். முக்கியப் புள்ளிகளில் ஒருவராக நீங்களும் மாறப் போகிறீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். வயல், வீடு என்று வருமானத்தை அசையாத சொத்துக்களாக மாற்றி வைத்துக் கொள்ள பிரியப்படுவீர்கள். புத்திர ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பெரிய படிப்பு படிக்க வேண்டும். கலெக்டராக வேண்டும், காவல் துறையில் உயரதிகாரியாக விளங்க வேண்டும், மருத்துவராகி நாடுவிட்டு நாடு சென்று புகழ்பெற வேண்டும் என்றெல்லாம் அசைபோட்டுப் பார்த்த உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் விதத்தில் அவை நடைபெறப் போகிறது.

**பத்தாமிடத்து குரு முத்தான பலன் தருமா?**

உங்கள் ராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்த்து ஏராளமான நற்பலன்களை வழங்கப் போகிறார.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு பதவியில் உள்ள இடையூறுகளை அகற்றுவார். எதிரிகள் உதிரிகளாவர். இரண்டாமிடத்தைக் குரு பார்த்தால் திரண்ட செல்வம் வந்து சேரும் என்பார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்பதவி கிடைக்க வைபபதும், ஒரு தொழில் செய்பவரை மறுதொழில் செய்ய வைப்பதும் பத்தாமிடத்து குருவின் சஞ்சாரம் தான்.

**இரண்டினை குருதான் பார்த்தால்**

**திரண்டதோர் செல்வம் சேருமே!**

**நான்கினை குருதான் பார்த்தால்**

**நலம் யாவும் வந்து சேரும்!**

**ஆறினை குருதான் பார்த்தால்**

**ஆதாயம் பிறரால் கிட்டும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

குறிப்பாக குருப்பெயர்ச்சிக்குப் பிறகு இரண்டாமிடத்தைக் குரு பார்ப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். மணி விழா, மண விழா, முத்து விழா, பவள விழா போன்ற விழாக்கள் இல்லத்தில் நடைபெறும். நான்காமிடத்தை குரு பார்ப்பதால் கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். பதவி மாற்றம், இடமாற்றம், உத்தியோகத்தில் நீண்ட தூர மாறுதல் ஒரு சிலருக்கு வந்து சேரும். ஆறாமிடத்தை குரு பார்ப்பதால் வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். எதிரிகள் விலகுவர். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு செயற்பட்டு தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**நலம் தரும்**

**ராகு-கேது பெயர்ச்சி!**

[illegible] மார்கழி மாதம் 23 ஆம் திகதி அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். 10 இல் சஞ்சரிக்கும் ராகுவால் தொழில் வளம் மேலோங்கும். பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதியவர்களை இணைத்துக் கொள்வீர்கள். வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வெளிநாட்டுத் தொடர்பும் விருத்திக்கும். வீடு வாங்கும் யோகம் முதல் விலை உயர்ந்த தங்கம், வெள்ளி பொருட்களை வாங்குவது வரை கேதுவின் ஆதிக்கத்தால் நிகழவிருக்கிறது.

பெற்றோரின் நலத்தில் கவனம் தேவை. எப்பொழுதோ வாங்கிய இடம், இப்பொழுது அதிக விலைக்கு விற்று ஆதாயத்தை உங்களுக்கு கொடுக்கப் போகின்றது. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். இது போன்ற நேரங்களில் பாம்பு கிரகங்களுக்குரிய யோக ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து பரிகாரங்கள் செய்வதன் மூலம் பல வழிகளிலும் உங்களுக்கு நன்மை வந்து சேரும்.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 12.6.2015 முதல் துலாம ராசியில் வக்ரமடைகிறார். 30.07. 2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 5.9.2015 இல் மீண்டும் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 26.3.2016 இல் மீண்டும் விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகிறார். இப்படி ஆண்டு முழுவதும் சனி வக்ரமாவதும், வக்ர நிவர்த்தியாவதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

பொதுவாக ஏழரைச் சனி நடைபெறும்பொழுது, சனி வக்ரம் பெற்றால் இனிக்கும் பலன்கள் ஏராளமாக நடைபெறும். சனி பலம் பெற்று சஞ்சரித்தால் மனக்கவலை அதிகரிக்கும். வாய்ப்புகள் வந்தும் உபயோகப்படுத்திக் கொள்வதில் தாமதம் ஏற்படும். குழப்பங்கள் அகல வேண்டுமானால் கோச்சாரம் சரியாக அமையாவிட்டாலும், தெசாபுத்தி பலம் பெற்றிருக்க வேண்டும்.

எனவே, ஆரோக்கியத் தொல்லை அகலவும், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கவும், ஜென்மச் சனி முடியும வரை தொடர்ந்து சனிக்கிழமை தோறும் காலை, மதியம், இரவு ஆகிய மூன்று நேரங்களிலும் ஆனைமுகப் பெருமான், சனி பகவான், அனுமன் ஆகிய தெய்வங்களை வரிசைப்படி வழிபட்டால் வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி நீங்கும்.

**குருவின் வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறும் பொழுதும், 07.02. 2016இல் சிம்ம ராசியில் வக்ரம் பெறும் பொழுதும் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. அதிசாரம் பெறும் பொழுது லாபம் இருமடங்காக வரலாம். ஆனால் வக்ரம் பெறும் பொழுது கூடுதல் விரயம் ஏற்படும். எந்தக் காரியத்தையும் ஒருமுறைககு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். விவாகம் செய்வது, விலையுயர்ந்த பொருட்களை வாங்குவது போன்றவற்றில் கவனத்தைச் செலுத்தலாம்.



**வருடம் முழுவதும் வசந்தம் பெற வழிபாடு!**

ராசிநாதன் செவ்வாயை பலப்படுத்த முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவதன் மூலம் கீர்த்தியைப் பெறலாம். பிரதோஷ வழிபாடும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். மேலும் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகள் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

விருச்சிக ராசியில் பிறந்த பெண்களே, ஆண்டின் தொடக்கத்திலேயே உச்சம் பெற்ற குரு உங்கள் ராசியை பார்ப்பதால் மிச்சம் வைக்கும் அளவிற்கு பொருளாதார நிலை உயரும். தாய்வழி ஆதரவு உண்டு. குடும்ப ஒற்றுமை பலப்படும். தேடிய வேலையும் கிடைக்கும்.

தெய்வீக நாட்டமும் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். உங்களின் ஆற்றலைப் புரிந்து கொண்டு குடும்ப உறுப்பினர்கள் உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாம் என்று முடிவு செய்வர். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. இட மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்ற மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

கல்யாணப் பேச்சுக்களை கால தாமதப்படுத்தாமல் முடித்துக் கொள்வது நல்லது. ஜென்மச் சனி விலகும் வரை பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை சேரும். ராகு- கேது பிரீதி நன்மையை வழங்கும்.






# சிம்ம குருவின் பார்வையால் செல்வ நிலை உயரும்!

இதுவரை உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் 10 ஆம் இடமான சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் [illegible] சுமார் ஓராண்டு காலம் [illegible]

**நாளை தனுசு...**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை தெக் கணப்பாய் அருள்மிகு கண் ணகியம்மன் ஆலய தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது...


## நிகழ்வின் நிழல்கள்



யாழ்.பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் 30 வருடங்களுக்கு பின் இன்கிலாப் சஞ்சிகை கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது...




ஜீவநதியின் 43 ஆவது வெளியீடான டென்மார்க் வி.ஜீவகுமாரனின் 'ஜீவ குமாரன் கதைகள்' வெளியீட்டு விழா கலாநிதி த.கலாமணி தலைமையில் தேவரையாளி இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற போது...



சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு 96 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட கலை நிகழ்வுகள் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் எஸ்.தேவநாயகன் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் க.பொ.த.உயர்தரப் பெறுபேற்றில் 3 ஏ சித்தியெய்திய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

புதுவருடத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல் லத்தில் தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தினர் கைவிஷேடம் வழங்குவதையும் இலைக்கஞ்சி வழங்கு வதையும் படங்களில் காணலாம்.




யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகனை வரவேற்கும் நிகழ்வு அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது ...





சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு நாம் நண்பர்கள் அமைப்பினூடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது...(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகலிடக் கோரிக்கையாளர்கள்

# 700 பேருடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்து

(ரோம்)

**ஆபிரிக்க நாட்டு புகலிடக் கோரிக்கையாளர்கள் 700இற்கும் மேற்பட்டோரை ஏற்றிக் கொண்டு ஐரோப்பா நோக்கி சென்ற மீன்பிடி படகு ஒன்று இத்தாலி அருகே நேற்று முன்தினமிரவு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**

### 600பேர் உயிரிழப்பு



ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழ ஆபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து புகலிடம் தேடி படகுகளில் செல்வோர் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக் கொணடே வருகின்றது. அவ்வகையில், சுமார் 700 பேரை ஏற்றிக் கொண்டு ஐரோப்பா நோக்கி சென்ற மீன்பிடி படகு ஒன்று நேற்று முன்தினம் இரவு லிபியா நாட்டின் கடல் எல்லை வழியாக சென்று கொண்டிருந்தது. தெற்கு இத்தாலியைச் சேர்ந்த லம்பெடுசா தீவின் அருகே அந்தப் படகு திடீரென கவிழ்ந்தது.

இதில் அந்தப் படகில் இருந்த 700இற்கும் மேற்பட்டோர் கடலில் விழுந்து தத்தளித்தனர். அவர்களில் 28 பேர் மட்டுமே உயிருடன் நீந்தி கரைக்கு திரும்பியுள்ள நிலையில் இந்த விபத்தில்600 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இவ்விபத்து பற்றிய தகவல் கிடைத்தவுடன் இத்தாலி நாட்டு கடற்படை மற்றும் கடலோரக் காவல்படையை சேர்ந்த கப்பல்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

விபத்துக்குள்ளான மீன்பிடி படகை ஒட்டி ஒரு சரக்கு கப்பல் வந்தபோது படகில் இருந்தவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் படகின் இடது புறத்தில் இருந்து வலதுபுறத்துக்கு மாறிதால் நிலைதடுமாறிய அந்தப் படகு கடலில் கவிழ்ந்ததாக இந்த விபத்தில் இருந்து தப்பிவந்த சிலர் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பாகிஸ்தான் கடற்படையினரால்

# இந்திய மீனவர்கள் 47பேர் சிறைபிடிப்பு

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 47 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை சிறை பிடித்துள்ளது.

நேற்று முன்தினம் அரபிக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 47 பேர் வழி தவறி பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது. இந் நிலையில் அப்பகுதியில் ரோந்துக்கு வந்த பாகிஸ்தான் கடற்படையினர் மீனவர்கள் 47 பேரையும் கைது செய்தனர். மேலும் மீனவர்களிடம் இருந்து 8 படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் கராச்சி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இன்று அவர்கள் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படவுள்ளனர். (இ-5)

# 600 கிலோகிராம் கடலட்டைகளுடன் தமிழக பொலிஸாரால் ஒருவர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்துவதற்காக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 600 கிலோகிராம் கடலட்டைகளை கைப்பற்றியதுடன் இதனுடன் தொடர்புடைய சந்தேக நபரையும் தமிழ்நாடு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத சந்தையில் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய இந்த கடலட்டைகளை கடத்துவதற்கு முற்பட்ட நபர், தமிழ்நாடு நாகப்பட்டினத்துக்கு அருகில் உள்ள கிராமமொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கடலட்டைகள், கடல் சுற்றுச்சூழலின் அமைப்பை பராமரிப்பதற்கு அவசியமானது என்றும் இவை இலங்கை மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் உணவுக்காகவும் மருந்துகளுக்காகவும் கடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# இலங்கை - ஜப்பான் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில், இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஆண்டில் குறித்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளதாக இலங்கை ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபிதோ ஹோபோ தலைமையில் அண்மையில் இலங்கை-ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் போதே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இந்திய மீனவர்கள் விவகாரத்தில் கடற்படையின் வழியில் மீனவர்கள்

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் மேற்கொண்ட தாக்குதலினால் இந்திய மீனவர்கள் எழுவர் காயமடைந்துள்ளனர்.

நடுக்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீனவர்களை தாக்கியதோடு அவர்களது உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் பயணித்த படகிற்குள் சென்று இலங்கை மீனவர்கள் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களின் தாக்குதல்களில் காயமடைந்த இந்திய மீனவர்கள் எழுவரும் கரைக்கு திரும்பியுள்ளதுடன்,

காயமடைந்தவர்கள் நாகை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சின்னையா சிவக்கொழுந்து

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா சிவக்கொழுந்து கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் பெரியாளோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.



### Dr.முத்துத்தம்பி வன்னித்தம்பி

(MD,MBBS,FRCP,DTD,MSc(Cardiology), Dip in Ultra sound & TB)

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.முத்துத்தம்பி வன்னித்தம்பி கடந்த வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் (Liberty Funerals,101, South Street Grand will மலர்ச்சாலையில்) பார்வைக்கு வைக்கப்படும்.



### சிவசரணம் குகநாதன்

யாழ்.வேலணைமேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசரணம் குகநாதன் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் திருவுடல் நேற்றுக்காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நாகரத்தினம் மயில்வாகனம்

ஓட்டுமடத்தை பிறப்பிட மாகவும் புங்குடுதீவு 6 ஆம் வட் டார ம் வில்லூன்றிப் பிள்ளையார் கோவி லடி, இந்தியா, திருச்சி, கனடா, ரொர ன்ரோ ஆகிய இட ங்களை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாக னம் நாகரத்தினம் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு Brompton Cermatorium & Visitation Center Inc, 30 Bramwin Ct, Brompton, ON L6T 5G2, Canada எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 விவசாயிகள் தற்கொலை!

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(மும்பை)

**வறட்சி மற்றும் பருவம் தவறி பொழியும் மழை காரணமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 3 மாதங்களில் மட்டும் 601 விவசாயிகள் தற்கொலை செய்து உயிரை மாய்த்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**

மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட 13 மாநிலங்களில் கடந்த வெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பருவம் தவறி மழை பெய்தது. இதனால் ரசி பருவத்தில் பயிரிடப்பட்டிருந்த கோதுமை, தானிய வகைகள், காய்கறிகள் உள்ளிட்டவை முழுவதுமாக சேதமடைந்தது. ஏற்கனவே வறட்சி காரணமாக வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு பருவம் தவறி பெய்த மழையும் அவர்களை கவலை அடையச் செய்தது.

இதனால் கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மட்டுமே மகாராஷ்டிராவில் 601 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதில் விதர்பா தொகுதியில் மட்டும் 319 பேரும், மார்க்குவாடா பகுதியில் 215 பேரும் என தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தற்கொலை பட்டியல் நீள்கிறது. ஆனாலும் பாதிக்கப்பட்ட 90 இலட்சம் விவசாயிகளுக்கு அரசு அறிவித்துள்ள 4 ஆயிரம் கோடி ரூபாய் போதவில்லை என்றும், இதனை கணக்கிட்டால் தலா ஒரு விவசாயிக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. ஆயிரத்து 875 மட்டுமே இழப்பீடு கிடைப்பதாகவும் விவசாய சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

விவசாயிகளின் பரிதாபமான நிலையை கருத்தில் கொள்ள மறுக்கும் வங்கிகளும் கடனை திருப்பிசெலுத்த தொடர்ந்து அறிவுறுத்தி வருவதும், விவசாயிகளின் தற்கொலை தொடர்வதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. கடந்த ஆணடு மட்டும் இம் மாநிலத்தில் ஆயிரத்து 981 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் பரிதாபமாக மரணம்

(வேலூர்)

கிருஷ்ணகிரி மாவட்டம் குரங்குக்கல் மேடு என்ற இடத்தில் நேற்று கார் மரத்துடன் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

திருப்பத்தூர் அடுத்துள்ள ஓமகுப்பம் பகுதியை சேர்ந்த வில்லியம்ஸ், ஜரினா மேரி, ஜோயல், ஜனித், சுசிலா, செல்வி மற்றும் ஜான்சன் ஆகிய 7 பேரும் ஒரு காரில் திருப்பத்தூரில் இருந்து திருவண்ணாமலைக்குச் சென்று கொண்டிருந்தனர்.

இவர்கள் சென்ற கார், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ள குரங்குக்கல் மேடு என்ற இடத்தை கடந்துள்ளது. அப்போது, வீதியில் சென்று கொண்டிருந்த அவர்களின் கார் திடீரென எதிர்பாராத விதமாக அங்கிருந்த ஆலமரம் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில், காரில் பயணம் செய்த 4 பெண்கள், இரண்டு குழந்தைகள் கார் சாரதி என அனைவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த சிங்காரப்பேட்டை பொலிஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அரசு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)




# துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் மரணம்



இந்திய ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் பிரிவினைவாதத் தலைவர் மஸ்ரத் ஆலம் கைதுசெய்யப்பட்டதை அடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் நீடித்த மோதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்லெறியவும், பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்திய அரசுக்கு எதிராகவும், பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் கோஷமிட்டுச் சென்ற ஒரு ஊர்வலத்தை வழிநடத்தியதற்காக மஸ்ரத் ஆலம் கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரிவினைவாதிகள் முழு அடைபுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில், கடைகள், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பொதுப்போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


# பிரதமர் மோடியின் வருகையால் 8ஆயிரம் கோடி ரூபா வர்த்தகம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையால் இரு நாடுகளுக்கு இடையே 8,000 கோடி ரூ. அளவுக்கு வர்த்தக நடவடிக்கைகள் தொடங்கியுள்ளதாக கனடா அரசு தெரிவித்துள்ளது.

அண்மையில், ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நரேந்திர மோடி, கனடாவுக்கும் சென்றிருந்தார்.

இதுகுறித்து அந்நாட்டின் பிரதமர் அலுவலகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

இந்தியப் பிரதமர் மோடியின் வருகையின்போது, இரு நாடுகளின் நிறுவனங்களுக்கிடையே



வர்த்தகம் தொடர்பாக 16 ஒப்பந்தங்கள் மற்றும் வர்த்தக அறிவிப்புகள் செய்யப்பட்டன.

அந்த அறிவிப்புகளில் பாதுகாப்பு, கல்வி, சுரங்கம், உள்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் அடங்கும். இந்த ஒப்பந்தங்களால் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவு மேலும் வலுவடையும்.

இந்தியாவுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு யுரேனியம் ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இது இந்தியா - கனடா இடையிலான அணுசக்தி கூட்டமைப்பு ஒப்பந்தத்தின்படி ஏற்படுத்தப்பட்டதாகும்.

கனடா மக்களுக்கு விசா வழங்கும் நடைமுறைகள் எளிதாக்கப்படும் என மோடி அறிவித்தது வரவேற்கத்தக்கதாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# புறக்கணிக்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம்

## சோனியா பரபரப்பு பேச்சு

(டில்லி)

-மத்திய அரசின் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து டில்லி ராம்லீலா மைதானத்தில் காங்கிரஸ் சார்பில் விவசாயிகள் பேரணி நேற்று நடைபெற்றது. இப்பேரணியில் உரையாற்றிய சோனியாகாந்தி, போதும் நிறுத்துங்கள். விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம் என்று மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பரபரப்பாக பேசினார்.

இக்கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றியதாவது, மத்திய அரசின் பொய் சத்தியங்களை நாம் உணர்ந்து விட்டதால் தான் இங்கு கூடியுள்ளோம். இங்கு கூடியுள்ள பெருமளவு கூட்டம் காங்கிரஸ் கட்சியின் நோக்கத்திற்கு வலு சேர்த்துள்ளது. கால நிலை மாறி பெய்த மழையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களது காயங்களின் மேல் மோடி அரசு உப்பு தூவி வருகிறது. விவசாயிகளுக்கு சொற்ப அளவிலான நிவாரண உதவியே அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அடித்தளமே விவசாயிகள்தான். இந்தியாவை உருவாக்கியதும் விவசாயிகளே. அப்படிப்பட்ட விவசாயிகளின் உரிமை பறிக்கப்பட்டு, தொழிலதிபர்களின் உரிமையை காப்பதற்காக மத்திய அரசு செயற்பட்டு வருகிறது.

இதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இந்திய நாட்டின் வலிமை மோடிக்கு தெரியவில்லை

இந்திய நாட்டின் வலிமை பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்னும் தெரியவில்லை என காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். மத்திய அரசின் நிலம் கையக மசோதாவுக்கு எதிராக டில்லி ராம் லீலா மைதானத்தில் நேற்று காங்கி ரஸ் சார்பில் பேரணி, பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலட்சக்கணக்கான விவசாயிகள் பங்கேற்றிருந்தனர் என பேரணி அமைப்பாளரும் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திக்விஜய் சிங் தெரிவித்தார்.

முன்னதாக திடீர் விடுமுறைக்கு பின்னர் தன் முதல் அரசியல் நிகழ்வாக விவசாயசங்க பிரதிநிதிகளை ராகுல்காந்தி நேற்று முன்தினம் தனது வீட்டில் சந்தித்தார்.



அப்போது நிலமசோதாவை அடியோடு வேரறுக்க தான் இறுதி வரை போராடுவேன் என்றும் இன்று தொடங்கும்நாடாமன்றக்கூட்டத்தொடரில் இந்த விவகாரத்தை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வேன் என்றும். அவர் உறுதியளித்தார்.

இந்நிலையில் நேற்று நடந்த பேரணியில் பேசிய ராகுல் காந்தி நாட்டின் வலிமை பிரதமர் நரேந்திர மோடிக்கு தெரியவில்லை என குற்றஞ்சாட்டினார். மேலும் மென்பொறியாளர்கள், தொழிலதிபர்களை விட விவசாயிகள் தான் நாட்டில் வலிமையானவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்வழித் தாக்குதலால் ஏமனில் 76 பேர் மரணம்

(ஏடன்)

**ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியப் படையினர் நடத்திய கொடூர வான்வழித் தாக்குதலில் 76 பேர் உயிரிழந்தனர் என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

ஏமனில் பல்வேறு நகரங்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் பிடித்து வைத்துள்ளனர். கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிட்டு வரும் அந்நாட்டு இராணுவத்தினருக்கு உதவியாக சவுதி அரேபியப் படையினரும் சண்டையிட்டு வருகின்றனர்.



இந்நிலையில், ஏமனில் பல்வேறு இடங்களில் கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியப் படையினர் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை வரை தொடர் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஏமனில் உள்ள அல்-அனாட் விமான நிலையத்துக்கு அருகே கிளர்ச்சியாளர்களின் முகாம் மீது வியாழக்கிழமை இரவு சவுதி அரேபியப் படையினர் விமானத் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் 20 கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர்.

இதேபோல், ஏடன் நகரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 32 கிளர்ச்சியாளர்கள் உட்பட 40 பேர் பலியாகினர்.

இதனைத் தொடர்ந்து, ஏமனின டாயிஸ் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் மேலும் 16 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## கலவரத்தில் சிக்கிய 6 பேர் உயிரிழப்பு!



தென்னாபிரிக்காவில் குடியிருக்கும வெளிநாட்டினருக்கு எதிராக மூண்ட கலவரத்திற்கு எதிராக நேற்று முன்தினம் மூண்ட கலவரத்தில் 6 பேர் பலியாகியுள்ளனர்.

தென்னாபிரிக்காவில ஏராளமான வெளி நாட்டினர் குடியுரிமை பெற்று அங்கேயே நிரந்தரமாக தங்கியுள்ளனர். இதனால் தங்களது வேலை வாய்ப்பும், வாழ்வாதாரமும பாதிக்கப்படுவதாக தென்னாபிரிக்க மக்களில் சிலர் கருதுகி ன்றனர்.

எனவே, அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டினருக்கு எதிராகவும், அவர்கள் வெளியேற வலியுறுத்தியும் துறைமுக நகரமான டர்பனில் சில வாரங்களுக்கு முன்பு கலவரம் மூண்டது.

தற்போது அக்கலவரம் படிப்படியாக தலைநகர் ஜோகனஸ்பேர்க் நகருக்கும் பரவியது. கலவரத்தில் ஈடுபட்டவர்கள் இரவோடு இரவாக கடைகளை உடைத்து பொருட்களை கொள்ளையடித்தனர்.

வீடுகளில் புகுந்து பொருட்களை சூறையாடினர். ஜோகனஸ்பேர்க்கை ஒட்டியுள்ள அலெக்சாண்ட்ரா டவுனஷிப்பில் வன்முறை தலை விரித்தாடுகிறது. வீதிகளில் டயர்களை போட்டு கொளுத்தி போக்குவரத் துக்கு தடை ஏற்படுத்தியுள்ளனர்.

வன்முறையை ஒடுக்க போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் இறப்பர் குணடுகளை வீசி விரட்டியடித்து வருகின்றனர். வன்முறை சம்பவத்துக்கு இதுவரை 6 பேர் பலியாகி உள்ளனர்.

வெளிநாட்டினரை குறிவைத்து தாக்குதல் நடைபெறுவதால் பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டினர் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறி பாதுகாப்பு மையங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தற்போது நிலைமை மோசமடைந்து வருவதை தொடர்ந்து அயரல் நாடுகளான சிம்பாவே, மாலவி, மொசாம்பியா உள்ளிட்ட நாடுகள் தங்கள் நாட்டு மக்களை வெளியேறும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

தென்னாபிரிக்க ஜனாதிபி ஜேக்கப் சூமா ஆபிரிக்கா மற்றும் ஆசிய தலைவர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள இந்தோனேசியா செல்வதாக இருந்தார். தற்போது கலவரம் தீவிரம் அடைந்துள்ளதால் தனது இந்தோனேசிய பயணத்தை இரத்து செய்து விட்டார்.

தாக்குதலுக்கு அஞ்சி டர்பன் பாதுகாப்பு முகாம்களில் தங்கியிருக்கும் வெளிநாட்டினரை சந்திக்க ஜனாதிபதி சூமா திட்டமிட்டுள்ளார். மேலும் நாட்டு மக்கள் அமைதி காக்கும் படியும், தங்கள் நாட்டில் வாழும் மக்களை சகோதர, சகோத ரிகளாக பாவித்து அன்பும், அமை தியையும் பேணி காக்கும் படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

## தன்சானியாவில் தங்கச் சுரங்கத்தில் திடீரென ஏற்பட்ட விபத்தில் 19பேர்பலி

தன்சானியா நாட்டில் சலாலா மாவட்டத்தில் உள்ள தங்கச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விபத்தில் 19 பேர் பலியாகினர். இதுகுறித்து மாவட்ட ஆணையர் பென்சன் மம்பேசாயா கூறும்போது, இந்த தங்கச் சுரங்கத்தில் உள்ள ஒரு பகுதியில் சில பணியாளர்கள் தங்கள் பணிகளை மேற கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று அவர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த குழியில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதன் காரணமாக, அவர்கள் மண்ணுக்குள் புதைந்து போயினர். அவர்களை மீட்கும் பணி தீவி ரமாக நடைபெற்று வருகிறது. தற்போது வரை 19 பேரின் உடல்களை மீட்டுள்ளோம் என்றார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் அதிக அளவு தங்கம் உற்பத்தி செய்யக்கூடிய நான்காவது நாடாக தன்சானியா உள்ளது. அந்த நாட்டுக்கு அநநியச் செலாவணியை ஈட்டுத் தருவதில தங்கம் மிக முக்கிய இடம் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## லண்டனில் விசாரணையை நான் எதிர்கொள்ள தயார்

### அஸாஞ்சே ஒப்புதல்

(டோக்கியோ)

லண்டனில் உள்ள ஈகுவடோர் நாட்டு தூதரகத்தில் வைத்து தன்னை விசாரிக்க "விக்கிலீக்ஸ்" நிறுவுநர் ஜூலியன் அஸாஞ்சே ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு சுவீடன் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களை அஸாஞ்சே பாலியல் வன்கொடுமை செய்ததாக சுவீடன் நாட்டு அரசு 2012ஆம் ஆண்டு குற்றம் சாட்டியது.

இந்தக் குற்றச்சாட்டை அஸாஞ்சே மறுத்துள்ளார். எனினும், இதனால் தான் சுவீடனுக்கு நாடு கடத்தப்படுவதைத் தடுக்க அவர் லண்டனில் உள்ள ஈகுவடோர் நாட்டுத் தூதரகத்தில் 2012ஆம் ஆண்டு முதல் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த மார்ச் மாதம் அஸாஞ்சேவை லண்டனில் அவர் இருக்கும் இடத்தில் வைத்தே விசாரணை நடத்த ச்வீடன் நாட்டு அதிகாரிகள் அனுமதி கேட்டிருந்தனர். இதனை அஸாஞ்சேவின் வழக்கறிஞர்கள் வரவேற்றாலும், இன்னும் தீர்க்கமான முடிவை அவர்கள் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. (இ-5)




## வெட்டுக்கிளி உடையணியும் ஜப்பானிய பௌத்த துறவி

வெட்டுக்கிளி போல் உடையணிந்து மது போதையில் வாகனம் செலுத்துபவர்களை பிடிக்கும் செயலில் ஈடுப்பட்டு வருகிறார் ஜப்பானை சேர்ந்த புத்த துறவி ஒருவர.

ஷின்ஜிரோ குமாகை ஜப்பானின் கிட்டாக்யுஷி நகரத்தில் வசித்து வருகிறார். சுற்றுச்சூழல் கலைஞரான அவர் பழைய அலுமினியம் கான்களில் இருந்து சிலைகள் செய்யும் வேலை செய்து வருகிறார். அந்த வேலையை முடித்துவிட்டு, 1971 முதல் 1973 ஆண்டுகளில் ஒளிபரப்பாகிய அறிவியல் புனைக் கதை தொலைக்காட்சி ஹீரோ வான 'காமென் ரைடர் 1'-இல் வரும் கதாநாயகன் போல் உடையணிந்து கொண்டு சைக்கிளில் சென்று மது போதையில் வாகனம் செலுத்துபவர்களை பிடித்து வருகிறார். இதனால் அந்த பகுதி மக்களால் ஷின்ஜிரோ ப



கொண்டாடப்படுகிறார்.

இது பற்றி அந்த நகரத்தில் கடைவைத்திருக்கும் உமேட்தா என்பவர் கூறும் போது "ஜப்பானில் மிகவும் விரும்பப்படும் காமென் ரைடர் 1 கதாபாத்திரம் போல உடையணிந்து கொண்டு ஷின்ஜிரோ குமாகைம் செயற்படுவதால் குழந்தைகள் அவரை மிகவும் விரும்புகிறார்கள். அதேசமயம் மது போதையில் வாகனம் செலுத்துபவர்களால் ஏற்ப டும் பாதிப்புகளை பற்றி விழிப்புணர்வும் ஏற்படுகிறது" என தெரிவித்தார்.

ஷின்ஜிரோக்கு அந்த நாட்டு பொலிஸார் சிறப்பு அடை யாள அட்டை வழங்கியுள்ளனர், அதே போல் பொதுமக்கள் சிலரும் அவருக்கு பண உதவியும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஐ.நா.சபை பட்டியலிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அதிரடி நீக்கம்

ஐ.நா.சபையின் உலகவானிலை அமைப்பு வைத்திருக்கும் புயல்களின பெயர் பட்டியலில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற பெயர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உருவாகும புயல்களுக்கு உலக வானிலை அமைப்பு பெயர் சூட்டி வருகிறது. அதற்கான பெயர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலையில், அதில் ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற பெயரும் இடம்பெற்றிருந்தது. தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பயங்கரவாதிகள் மிக மோசமான பயங்கர வாத செயல்களில் ஈடுபட்டு வருவ தால், அந்த பெயரை புயல் பட்டியலில் இருந்து நீக்கியிருப்பதாக செய்தித் தொடர்பாளர கிளாரி நுல்லிஸ் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற முறுக்கினால் அறுந்து போகும்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதல்வர் விக்னேஸ்வரன் தனது பிறவிச் சமயத்தை கை கழுவினாரா?

சனம் பித்தம்; சனம் வாதம் என்றொரு வார்த்தைப் பிரயோகம் கிராமிய மொழியில் உண்டு. சனம் பித்தம்; சனம் வாதம் என்றால் என்ன? என்று யாரேனும் கேட்டு விடாதீர்கள். ஊர்ப் பெரியவர்களிடம் கேட்டால் அதன் பொருள் விளங்கும். இது ஒரு புறம் இருக்க,

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள், மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அவர்களின் 75ஆவது அகவையை ஒட்டி வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்கி உள்ளார்.

தமிழ் மக்கள் பேரினவாதத்தால் தாக்கப்பட்ட போதெல்லாம் உண்மைக்காகவும் உரிமைக்காகவும் குரல் கொடுப்பவர் மன்னார் ஆயர் என்பது உலகறிந்த உண்மை. அவரின் பவள விழாவுக்கு தமிழ் கூறும் நல்லுலகின் மனப்பூர்வமான வாழ்த்து என்றும் உள்ளது.

எனினும் வடக்கின் முதல்வர் வழங்கிய வாழ்த்துச் செய்தியில்; உள்நாடு மற்றும் புலம்பெயர் தமிழர்கள் எத்தகைய தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பதை மன்னார் ஆயர் அறிந்து வெளியிட வேண்டும் என்று கூறியுள்ளதுடன்;

தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு நியாயமான- நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தர ஆயர் உதவ வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

வடக்கின் முதல்வர், மன்னார் ஆயருக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் ஓர் ஆன்மிகத் தலைவருக்கு அரசியல் சாயம் பூசுவதான செயற்பாடு தெரிவதுடன் தமிழ் அரசு என்று போற்றக்கூடிய வடக்கின் முதல்வர் என்ற உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு, மன்னார் ஆயர் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய வேண்டும்; தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண உதவவேண்டும் எனக் கேட்பதற்குள்,

தமிழ் அரசியல் தலைமையிடம் இன்னமும் பிரச்சினைக்கான தீர்வு இல்லை என்பது தெளிவாக்கப்படுகிறது. அதேநேரம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மன்னார் ஆயர் உதவ வேண்டும் எனக் கூறுவதற்குள், மன்னார் ஆயர் ஒரு பிரபாட்டு அரசியல் தலைவர் என்பது போல வடக்கின் முதல்வர் கருதுகிறார் என்று பொருள் கொள்ள இடம் உண்டு.

மன்னார் ஆயர் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதை நாம் வரவேற்க வேண்டும். அதேநேரம் அவர்களுக்கும் திருச்சபையின் கட்டுப்பாடுகள், ஆன்மிகப் பணிகள் என்பன உண்டு. இதையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

பௌத்த பிக்குகள் அரசியலில் தலையிடுவதை உலகம் ஒருபோதும் விரும்பவில்லை. மதத்தலைவர்களுக்கு அரசியல் எதற்கானது? என்ற கேள்வி எழுவதில் நியாயம் உண்டு.

இந்நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன; தீர்வு காண்பதற்கு மன்னார் ஆயர் உதவவேண்டும் என்று வடக்கின் முதல்வர் கேட்பாராக இருந்தால்,

நடைபெறும் அரசியல் பேச்சுவார்த்தைகளில் மன்னார் ஆயர் கலந்து கொள்ள வேண்டும் என்பதுடன் வடக்கின் மாகாண அரசில் முதல்வர் பதவி அல்லது அதற்கு மேற்பட்டதான ஒரு பதவியில் ஆயரை இருத்த வேண்டும். மன்னார் ஆயர் அவர்களை ஒரு ஆன்மிகத் தலைவராக நாம் பார்ப்பதே இங்கு முக்கியமானது.

தமிழ் மக்களின் உரிமைக்கான அவரின் குரலை ஆன்மிகத்தின் பணியாக வெளிப்படுத்துவதே பொருத்தம்.

எதுவாயினும் நீதியரசர் விக்னேஸ்வரன் முதல்வராகிய பின்பு, நெற்றிக் குங்குமத்தை- குருப் பிரம்மா; குரு விஷ்ணு என்ற சுலோகத்தை மட்டும் கைவிடவில்லை. மாறாக தனது பிறவிச் சமயத்தையும் கை கழுவி விட்டார் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

## சீனாவுக்கோ, இந்தியாவுக்கோ சார்பு இல்லை-ரணில்

(கொழும்பு)

இலங்கை சீனாவுக்கோ இந்தியாவுக்கோ சார்பான நாடு இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருவாயூர் கோயிலில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் தொடர்பாக பிரதமர் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, இலங்கை அரசாங்கம் இலங்கையர்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்டே செயற்படுவதாக தெரிவித்தார்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் மேலும் சுமுகமான உறவு அவசியம் எனவும் இரு நாடுகளும் முன்னோக்கி நகர வேண்டும்.

இதன் ஒரு அங்கமாகவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயமும், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயமும் காணப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேரள கலாசாரம் பற்றி இலங்கை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு குருவாயூர் தேவஸ்தானம் விடுத்த வேண்டுகோளை ஆக்கபூர்வமாக பரிசீலிப்பதாகவும் பிரதமர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தனக்கு சாதகமாக அமைந்தால் குருவாயூர் கோயிலுக்கு வருவதாக வேண்டியிருந்தமையினால், அந்த வேண்டுதலை நிறைவேற்றவே தான் இங்கு வந்ததாகவும் பிரதமர் ஊடகவியலாளர்களிடம் சுட்டிக்காட்டியிருந்தார். (செ-11)

## உதயங்கவை விசாரணை செய்ய உயர்மட்டக் குழு உக்ரேன் பயணம்

(கொழும்பு)

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்ஷவின் மருமகனுமான உதயங்க வீரதுங்க தொடர்பில் விசாரணை செய்வதற்காக அரசாங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவொன்று உக்ரேனுக்குச் செல்லவுள்ளது.

உக்ரேனிய தீவிரவாதிகளுக்கு உதயங்க வீரதுங்க ஆயுதங்களை விநியோகித்தார் என்று உக்ரேனிய அரசாங்கம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பான மேலதிக விபரங்களைத் திரட்டும் நோக்குடனேயே இந்த உயர்மட்டக்குழு உக்ரேனுக்குப் பயணமாகவுள்ளது.

இதுதொடர்பில் புதுடில்லியிலுள்ள இந்தியா மற்றும் இலங்கைக்கான உக்ரேனியத் தூதுவர் ஒலெக்சான்டர் சிவ்சென்கோவுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று திங்கட்கிழமை கலந்துரையாடவுள்ளார்.

இவரிடம் இலங்கையின் உயர் மட்ட விசாரணைக் குழு உக்ரேனுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மங்கள சமரவீர கோரிக்கை விடுக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உக்ரேனியத் தூதுவர் ஒலெக்சான்டர் சிவ்சென்கோவை கொழும்புக்கு வருமாறும் வெளிவிவகார அமைச்சரின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட உதயங்க வீரதுங்க தொடர்பில் இந்த விசாரணைக்குழு பல்வேறு கோணங்களில் விசாரணை செய்யவுள்ளது.



இலங்கை விமானப்படைக்கு மிக் - 27 வகை போர் விமானங்களை கொள்வனவு செய்தமை - இதன்போது உதயங்க வீரதுங்கவே தரகராக செயற்பட்டிருந்தார், இவரது தனிப்பட்ட செயலாளராக இருந்த நொயல் ரணவீர என்பவரின் மரணம் மற்றும் இவர் எவ்வாறு ஆயுதங்களைப் பெற்றார் என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வருகின்றது.

இவரை நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு பணித்திருந்த போதிலும், அவர் இதுவரை நாடு திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## த.தே.ம முன்னணி அ.இ.த காங்கிரஸ் அலுவலகங்கள் திறப்பு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் மாவட்ட அலுவலகம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, குருமன்காடு பகுதியில் குறித்த அலுவலகம் அமைந்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், கட்சியின் வடக்கு, கிழக்கு அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், வர்த்தக சங்கத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

## தேர்தல் காலத்தில் விநியோகிக்கப்பட்ட காவி உடை குறித்து விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் வாக்குகளுக்காக இலவசமாக வழங்கப்பட்ட 600 மில்லியன் ரூபாய் பெறுமதியான காவிப்புடைவை விநியோகம் தொடர்பில் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் இணைப்பாளராகச் செயற்பட்டதாகக் கூறப்படும் வட்டினாபஹ சோமானந்த தேரர் வாக்கு மூலம் பதிவு செய்வதற்காகப் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவுக்கு அழைக்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரகடனம் வெளியான பின்னர், தொலைத் தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபாய் செலவில் காவிப் புடைவைகளை கொள்வனவு செய்து விநியோகித்தமை தொடர்பிலான விசாரணைக்கு நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்திருந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

அந்த முறைப்பாடு குறித்து வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வட்டினாபஹ சோமானந்த தேரர் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டார் என்றும் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காக பல்வேறு பொருள்கள் இலவசமாகப் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## உலக வங்கி அதிகாரிகள் வருகை

(கொழும்பு)

கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களை மீள பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிகாரிகளுடனும், பொலிஸாருடனும் கலந்துரையாடுவதற்காக உலக வங்கியின் அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீள பெறுவதற்காக உலக வங்கி ஒரு பிரிவை ஏற்படுத்தியுள்ளது, அதன் அதிகாரிகளே இவ்வாறு இலங்கை வந்துள்ளனர். (செ-11)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உன்னுள் நான்; என்னுள் நீ



ஒரு கைப்பிடி பயறை எடுத்து ஒருகோப்பை நீரில் போட்டால் ஒரு சில மணிநேரத்தில் அந்தப் பயறு எல்லாவற்றுக்குள்ளும் தண்ணீர் நிறைந்து விடும். அதேநேரத்தில் பயறும் தண்ணீருக்குள் இருக்கும். அதாவது சுருங்கச் சொன்னால் தண்ணீருக்குள் பயறு, பயறுக்குள் தண்ணீர். அதேபோல இருப்பு நிலையான சுத்தவெளியானது எல்லா விண்துகள்களையும் விண்துகள்களாலான பருப்பொருட்களையும் சூழ்ந்தும் ஊடுருவியும் இருக்கிறது. இயக்கக்களமாகிய பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிற இருப்பு நிலையானது நிழல் அலைத் துகள்களால் நிரம்பப் பெற்றிருக்கிறது. ஆகவே துகள்களுக்கு இடையேயுள்ள வெளியானது வான்காந்தக் களமாகத் திகழ்கிறது.

இத்தகைய பிரபஞ்சக் களத்தின் ஒரு சிறு பகுதியில் உள்ள இந்தப் பூமியானது சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது. பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் பரிணமித்து வளர்ந்து, வாழ்ந்து, மறைந்து இறுதியிலே வான்காந்தக் களத்திலே கலக்கின்றன. பிரபஞ்சத்தின் வாழ்க்கையோடு ஒப்பிடும்போது மனிதனுடைய வாழ்க்கை மிகமிகச் சிறியதாகும். மனிதனின் இந்தக் குறுகிய வாழ்க்கைக் காலத்திற்குள் அவனது உடலிலே ஏற்படும் பல்வேறு விந்தைகளை யாரும் இன்னும் தெளிவாக விளங்கிக்கொள்ளவில்லை.

வாழ்க்கையை முழுமையாக நிறைவோடு வாழும் வகையில் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி, பிரபஞ்சத்தின் இயக்கம் இவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது நாம் உள்ளுணர்வாக உணரக்கூடிய மூன்று அடிப்படைத் தத்துவங்களான சுத்தவெளி, உயிர்ச்சக்தி, காந்தம் ஆகியவற்றின் சிறப்பை அறியலாம். இந்த மூன்றைப் பற்றியும் ஒருவர் தெளிவாகவும் சந்தேகம் இல்லாமலும் தெரிந்து கொள்வதற்குத் தவறினால் அவர் தத்துவ ஞானத்தையும் சரி விஞ்ஞானத்தையும் சரி ஆழமாகவும் பூரணமாகவும் தெரிந்து கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் சங்கக்காரவுக்கு கௌரவ விருது




லண்டனில் இடம்பெற்ற ஆசிய விருது வழங்கும் விழாவில் இலங்கையின் குமார் சங்கக்காரவிற்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

5ஆவது ஆசிய விருது வழங்கல் விழா (Asian Awards) லண்டனிலுள்ள Grosvenor House ஹோட்டலில் இடம்பெற்றது.

இவ்விழாவில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் குமார் சங்கக்காரவுக்கு, விளையாட்டுத்துறையில் சிறந்த பங்களிப்பாற்றியவருக்கான விருது ( Out standing Contribution to Sport) வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விருதினை 2011ஆம் ஆண்டில் முத்தையா முரளிதரன் பெற் றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

லண்டனில் இடம்பெற்ற ஆசிய விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட சங்கக்கார கூறுகையில், கெவின் பீற்றர்சன் மிகச் சிறந்தவீரர்.

இங்கிலாந்து அணியில் ஏற்பட்ட குளறுபடியால், அவரால் சில வருடங்களாக அணிக்கு திரும்ப முடியவில்லை. கவுண்டி போட்டியில் சிறப்பாக விளையாடி இங்கிலாந்து அணிக்கு மீண்டும் திரும்ப வேண்டும்.

அவர் அணிக்கு வரும்பட்சத்தில் இங்கிலாந்து அணி மீண்டும் பழைய நிலைக்கு திரும்பும். அவர் இல்லாமல் சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கு இங்கிலாந்து வெட்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (க)

# வலயமட்ட சம்பியனாகியது இடைக்காடு மகா வித்தி.



யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்துப் போட்டிகள் இந்த மாதம் 8, 9ஆம் திக்திகளில் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அந்தப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவின் இறுதி ஆட்டத்தில் யா/இடைக்காடு மகாவித் தியாலயமும் யா/வைத்தீஸ்வரா கல்லூரியும் மோதிக் கொண்டன.

பரபரப்பான இறுதி ஆட்டத்தில் யா/இடைக்காடு மகா வித்தியாலயம் 10:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று வலய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று இவ்வாண்டிற்கான வலய மட்ட சம்பியனானது. இதேவேளை இவ் அணியானது கோப்பாய் கோட்ட மட்டத்திலும் முதலாம் இடத்தை பெற்றிருந்தது.

இதேவேளை இப் பாட சாலையானது மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குகொள்ளும் கோப்பாய் கோட்டத்தை சேர்ந்த ஒரேயொரு பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். (க)

# சர்வதேச ஷம்கிர் செஸ் போட்டி; 2ஆவது சுற்றிலும் ஆனந்த் டிரா



ஆஸர்பெய்ஜான் நாட்டின் மறைந்த செஸ் வீரர் வுகர் கேஷிமோவ் நினைவாக நடைபெறும் ஷம்கீர் செஸ் தொடரின் 2ஆம் சுற்றில், 5 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தும், உலக சம்பியனான மேக்னஸ் கார்ல்சனும் மோதினர். முதல் சுற்று குறித்து கார்ல்சன் கூறுகையில்,

"மீண்டும் இங்கு செஸ் ஆட இருப்பது மகிழ்ச்சி. முதல் தொடர் அற்புதமாக நடத்தப்பட்டது. செஸ் வீரர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட்டனர். இந்தத் தொடரில் 5 முறை கறுப்பு நிறக் காய்களுடன் ஆட உள்ளேன். அதிலும், முதல் ஆட்டத்தில் கறுப்பு நிறக் காய்களுடன் ஆனந்தை எதிர்கொள்வது சவாலானது." என்றார்.

முதல் சுற்றில் வெள்ளை நிறக் காய்களுடன் ஆடிய ஆனந்த், மேக்னஸ் கார்ல்சென்னின் ஆட்ட நுணுக்கத்தை சமாளித்தே வந்தார். இருப்பினும், ஒரு கட்டத்தில் இருவரும் ஆட்டத்தை டிராவில் முடிக்க சம்மதித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்றில் ஆனந்த், பிரான்ஸ் நாட்டின் மேக்சிம் வேசியர் லக்ரவேயை எதிர் கொண்டார். இந்த முறை கறுப்பு நிறக் காய்களுடன் ஆடிய ஆனந்த் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய போதும், மேக்சிம் வேசியர் ஆட்டத்தை டிராவில் முடிக்க சம்மதித்ததால் அடுத்தடுத்து இரண்டு டிரா செய்த ஆனந்த், இரண்டு சுற்றுகளின் முடிவில் ஒரு புள்ளியைப் பெற்றுள்ளார். (க)

# மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணிக்கு அணித்தலைவராக கிளார்க்



அவுஸ்திரேலியாவில் நடக்கும் 'பிக் பாஷ்' இருபது-20 தொடரில் பங்கேற்கும் மெல்பேர்ன் ஸ்டா ர்ஸ் அணிக்கு, மைக்கேல் கிளார்க் அணித்தலைவராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவராக இருந்த மைக்கேல் கிளார்க், இந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

அதே போல் கடந்த 2012க்குப் பின் ஐபிஎல் தொடரில் பங்கேற்கவில்லை. உள்ளூரில் நடக்கும் இருபது-20 போட்டிகளிலும் ஒரு போதும் விளையாடியது இல்லை.

இந்நிலையில் 'பிக் பாஷ்' இருபது-20 தொடரில் பங்கேற்க முடிவு செய்த கிளார்க்கை, மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி அடுத்த இரண்டு ஆண்டுக்கு அணித்தலைவராக ஒப்பந்தம் செய்துள்ளது.

இது குறித்து கிளார்க் கூறுகையில்," சிறந்த வீரர்களை மெல்பேர்ன் அணி கொண்டுள்ளது என்றும், இந்த அணிக்கு கிண்ணம் வெல்ல என்னால் உதவ முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)

# மான்ட் கார்லோ டென்னிஸ் போட்டி; ஜோகோவிச்சிடம் வீழ்ந்தார் நடால்



மான்ட் கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடந்து வருகிறது. இது, பிரெஞ்ச் ஓபனுக்கு முன்னோடியாக களிமண் தரையில் நடக்கும் போட்டியாகும். இதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் அரைஇறுதி ஆட்டத்தில் 'நம்பர் வன்' வீரர் நோவக் ஜோகோவிச் (செர்பியா), 8 முறை சம்பியனான ரபெல் நடாலை (ஸ்பெயின்) எதிர் கொண்டார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6:3, 6:4 என்ற நேர் செட்டில் நடாலை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். அவர் தொடர்ச்சியாக பெற்ற 16ஆவது வெற்றி இது வாகும்.

மற்றொரு அரைஇறுதியில் செக் குடியரசின் தாமஸ் பெர்டிச் 6:1, 6:4 என்ற நேர் செட்டில் பிரான்சின் கேல் மான்பில்ஸை வென்றார். (க)

# 400 கோல்கள் அடித்து மெஸ்சி புதிய சாதனை




உலகின் தலைசிறந்த காற்பந்து வீரர்களில் ஒருவர் லியோனல் மெஸ்சி. ஆர்ஜென்டினாவை சேர்ந்த அவர் ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா கிளப் அணியில் விளையாடி வருகிறார்.

ஸ்பெயின் காற்பந்து 'லீக்' போட்டியில் வாலன்சியா அணிக்கு எதிராக மெஸ்சி ஒருகோல் அடித்தார். இதன்மூலம் அவர் 400ஆவது கோலை அடித்து முத்திரை பதித் தார்.

அவரது ஆட்டத்தால் பார்சிலோனா 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### வோட்சன், ரஹானே அபாரம்

# சுப்பர் கிங்ஸின் தொடர் வெற்றிக்கு முட்டுக்கட்டை போட்டது ராஜஸ்தான்

வோட்சன், ரஹானேயின் மிரட்டலான துடுப்பாட்டத்தினால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான ஐபிஎல் லீக் போட்டியில் ராஜஸ்தான் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார



வெற்றி பெற்றது.

அகமதாபாத்தில் நேற்று நடந்த 15ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயசுழற்சியில் வென்ற சென்னை அணித் தலை வர் தோனி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.


தொடக்க ஆட்டக்காரர்களாக ஸ்மித், மக்கலம் களமிறங்கினர். இதில் மக்கலம் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த புதுமாப்பிள்ளை ரெய்னா அதிரடி காட்டுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் வெறும் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ரசிகர்களை ஏமாற்றினார்.

இவரைத் தொடர்ந்து வந்த டு பிளசிசும் ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளிக்க,

சென்னை அணி 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தவித்தது.

இருந்தபோதும் தொடக்க ஆட்டக்காரர் ஸ்மித் அதிரடியாக விளையாடினார். 29 பந்துகளில் 40 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 2




சிக்ஸர்) எடுத்தபோது போல்க்னர் பந்தில் போல்ட் ஆனார்.

இதன்பின்னர் ஜோடி சேர்ந்த பிராவோ, தோனி சிறப்பாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தது.

இவர்களின் இணைப்பாட்டத்தால் சென்னை அணி மீள்புத்துணர்ச்சி அடைந்தது.

பிராவோ அதிரடியாக விளையாடி அரைசதம் (62) கடந்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவருடன் அணித் தலைவர் தோனி 31 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் சென்னை அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 156 ஓட்டங்களை குவித்தது.

ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி சென்னை அணியின் ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்தினர். அன்கிட் சர்மா, மொரீஸ், பிரவீன் தாம்போ, போல்க்னர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு, தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அணித் தலைவர் வோட்சன், ரஹானே சிறப்பாக விளையாடி அரைசதம் விளாசினர்.



வோட்சன் 47 பந்துகளில் 73 ஓட்டங்கள் (6 பவுண்டரி, 4 சிக்ஸர்) எடுத்து ஆட்டமிழந்தார். ஸ்மித் 6 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, கருண் நாயர் (1) களத்தில் இருந்தார்.

இவருடன் 55 பந்துகளில் 76 ஓட்டஙகள் (6 பவுண்டரி, 2 சிக்ஸர்) எடுத்து ரஹானே ஆட்டமிழக்காமல் இருந்தார்.


இதன்மூலம் 18.2 ஓவர்களிலே 2 விக்கெட்கள் மட்டும் இழந்து ராஜஸ்தான் அணி வெற்றியிலக்கை எட்டியது. இதனால் 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் அஜின்கியா ரஹானே தெரிவானார். (க)

# மும்பைக்கு முதல் வெற்றி

எட்டாவது ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணி முதல் வெற்றியை பதிவு செய்தது. நேற்று நடந்த லீக் போட்டியில் பெங்களூருவை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதானத்தில் நேற்று நடந்த 8ஆவது ஐபிஎல்., தொடருக்கான 16ஆவது லீக் போட்டியில், பெங்களூரு-மும்பை அணிகள் மோதின.



கடந்த நான்கு போட்டியில் வரிசையாக தோற்ற மும்பை அணி, இம்முறை வெற்றியை எதிர்நோக்கி களமிறங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூரு அணித் தலைவர் விராத் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

மும்பை அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 209 ஓட்டங்கள் குவித்தது.

துடுப்பாட்டத்தில் சிம்மன்ஸ் 59, உன்முக்த் சந்த் 58 ஓட்டங்கள் எடுத்தனர்.

பெங்களூரு அணி சார்பில் டேவிட் வைஸ் 4 விக்கெட் வீழ்த்தினார்.

210 ஓட்டங்களை வெற்றியிலக்காகக கொண்டு களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 191 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. டேவிட் வைஸ் (47), அபு நேசிம் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை அணி சார்பில் 3 விக்கெட் கைப்பற்றிய ஹர்பஜன் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (க)

## புதிய தேர்தல்...

சுந்தரம்பிள்ளை, மனோ கணேசன், பிரபா கணேசன், அத்துரலிய தேரா உட்பட சுமார் இருபது கட்சிகளுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதிய தேர்தல் திருத்த சட்ட மூலத்தில் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதித்துவம் குறைவடையும் வாய்ப்புள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 இல் இருந்து 250 ஆக உயர்த்தும் போது சிறுபான்மை இனத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவப் பெறுமானம் குறைவடையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஜேர்மனியிலுள்ள தேர்தல் முறைமையே இலங்கைக்குப் பொருத்தம் என்பதையும் சுட்டிக்காட்டினர்.

புதிய தேர்தல் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பது என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ந)

## அச்சுவேலியில்...

ஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தெரிவித்தனர். மேற்படி காணியின் உரிமையாளர் விவசாய நடவடிக்கைக்காக நிலத்தை பதப்படுத்திய போது, குண்டு இருப்பதை கண்ணுற்று, அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து அச்சுவேலி 521ஆவது இராணுவ படையணியின் குண்டு செயலிழக்கும் பிரிவினருடன் சென்று குண்டை மீட்டதாக பொலிஸார் கூறினர். (செ-11)

## தேர்தல் முறை...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் சந்திப்பிலேயே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக, நியூஸ்பெஸ்ட்டிற்கு கருத்து வெளியிட்ட போது எதிர்கட்சித் தலைவர் கூறியுள்ளார்

இந்த விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தேர்தல் திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இந்தியா இனி...

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் அனுபவப் பகிர்வு தொடர்பிலான கலந்துரையாடலொன்று யாழ்.வைமன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவனத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபை முறைமைக்கு இந்தியா காரணமாகவிருந்தாலும், இதற்குள் இந்தியா இனி தலையிடும் என எனக்கு தெரியவில்லை. மாகாண சபைக்கு இருக்கின்ற அதிகாரங்கள் அல்லது இருக்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து இந்தியா ஒருபோதும் கரிசினை கொள்ளப்போவதில்லை.

மாகாண சபைக்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து இலங்கைக்குள்ளேதான் ஆராயப்படல் வேண்டும். இதன்மூலமே மாகாண சபைக்கான அதிகாரங்களையும் பெற முடியும்.

மக்கள் சக்தியிலுள்ள ஜனநாயக சக்திகளும் இலங்கையில் உள்ள ஆட்சியாளர்களும் சிங்கள மற்றும் ஏனைய சமூகங்கள் மத்தியிலுள்ள தலைவர்களும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இவ்மாகாண சபை அர்த்தமுள்ளதாக கொண்டு செல்ல வேண்டும்.

மாகாண சபை செயற்பட முடியாத, செயற்பட வைக்க முடியாத நிலையில் உள்ளது. பயனற்றது என கருதினால் அந்த மாகாண சபை தேவையற்றது எனக் கூறலாம்.

13ஆவது திருத்தச் சட்டம் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நிலை சிங்களமக்களிடையேஉள்ளது.

13ஆவது திருத்தம் தேவையற்றறது, பிரயோசனம் அற்றது, குறைபாடானது என நினைத்தால் அதனை முழுமைப்படுத்துமாறு கோரலாம்.

வெளியில் உள்ளவர்களான அமெரிக்கா, இந்தியா அல்லது ஜெனிவாவாக இருந்தாலும் சரி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்று என கூறுபவர்கள் ஆனால் என்ன நிறைவேற்ற வேண்டும் என குறிப்பிட்டு கூறமாட்டார்கள்.

ஆகவே இலங்கைக்குள்ளேயே இதுதொடர்பில் ஆராயப்படல் வேண்டும்.

13ஆவது திருத்தம் தொடர்பில் வெளியில் இருந்து உள்வந்து வலியுறுத்தும் நிலை ஒருபோதும் சாத்தியப்படாது.

ஆகவே இதனை 13ஆவது திருத்தம் தேவையா? இல்லையா? என மாகாண சபையே தீர்மானிக்க வேண்டும்.

மாகாண சபை சிறப்புற இயங்குவதற்கு புறச்சூழல் அவசியமானது. இதுவடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் காலத்தில் சாதகமாகவே இருந்தது. இதனை விட புரிதல் என்பதும் அவசியமானதாகும்.

இன்று அன்றைய சாதகமான சூழ்நிலைகள் காணப்படாவிட்டாலும் வேறுவிதமான சாதகமான புறச்சூழ்நிலைகளும் இருக்கின்றன.

ஆகையினால் சாதகமான புறச்சூழல்கள் என்ன என்பதனை வட மாகாண சபை அடையாளம் கண்டு எப்படி எமக்கு சாதகமாக இதனை மாற்றுவது என்பது குறித்து ஆராயப்படல் வேண்டும்.

சட்ட நிபுணர்கள், அனுபவம் உள்ளவர்கள், போராட்ட இயக்கங்களை நடத்தியவர்கள், தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள்.

ஆகையினால் எந்த பாதகத்தையும் எமக்கு சாதகமாக மாற்றியமைக்க முடியும். மாகாண சபையும் அவ்வாறுதான்.

மாகாண சபைக்கான அதிகாரங்களை கொடுக்க வேண்டும் என்று அன்று சிங்கள முற்போக்கு சக்திகள் எவையும் குரல் கொடுக்கவில்லை. ஆனால் இன்று குரல் கொடுக்கின்றன.

ஆகையால் இவ்வாறான சாதகமான சூழலை பயன்படுத்தி மாகாண சபை முறைமையை எமக்கு சாதகமாக மாற்றியமைக்க வேண்டும். முடிந்தால் முடியும் என்றார் அவர். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19-ம் திருத்த விவாதம்...

தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் 19 ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக சில இணக்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இதன்படி உச்சநீதிமன்றத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுளள திருத்தங்களை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதானால் அதற்கு ஆதரவளிக்க முடியுமென்று தனது கட்சி அறிவித்ததாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனிவிரத்ன, இதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்ததாகவும் கூறினார்.

அரசியல் யாப்பிற்கு முரணான எந்தவொரு திருத்தங்களும் இந்த விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட மாட்டாதென்று பிரதமர் உறுதிமொழி யொன்றை வழங்கியதாக தெரிவித்த ஜோன் செனிவிரத்ன இதன்படி உச்ச நீதிமன்றத்தினால் அனுமதிக்கப் பட்ட திருத்தங்களுக்கு ஆதரவளிக்க தனது கட்சி தீர்மானித்ததாகவும் கூறினார். (செ-11)




Digital

விஷேட கட்டண சலுகைகள்

## இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101

(C-740)



## British College of Higher Studies

வழங்கும் மாபெரும் கட்டணக் கழிவு

**50 % Discount**

**Spoken English with Grammar**

~~6500~~/= Duration : 80 Hrs 3250/=

**Diploma in English**

~~9000~~/= Duration : 110 Hrs 4500/=

வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும் எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாகவரின் அவர்களுக்கு வீசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

**English For Higher Education**

~~10'000~~/= Duration : 90 Hrs 5000/=

பல்கலைக்கழக மாணவர்கள், A/L, O/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் உயர் கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்கள் போன்றவர்களின் நலன் கருதி இக் கற்கை நெறியானது ஆரம்பமாகவுள்ளது.

Batches Start on

Batch I : 20/04/2015 08.30am to 12.30pm Batch III :25/05/2015
Batch II : 22/04/2015 01.00pm to 05.00pm Batch IV :26/05/2015

BCHS

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913, 0777222422, 0714299935

(C-747)


# இலங்கை வரும் ஜோன்...

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி தனது இலங்கைக்கான பயணத்தின் போது அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுடனும் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த போது, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி அடுத்த மாதம் வேறு பல நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அவர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியின் இலங்கைக்கான பயணத்துக்கான திகதி தொடர்பில் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் இதுவரை அறிவிக்கவில்லை.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி அடுத்த மாதம் நிச்சயமாக இலங்கைக்கு விஜயம் செய்வார் என அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்துக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இலங்கைக்கான தனது பயணத்தின் போது, அரசாங்கத்துடன் மட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சிகளுடனும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி இலங்கைக்கு விஜயம் செய்தால், 40 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க உயரதிகாரியாக அவர் இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பிரிட்டன் தேர்தலில்...

(சட்டத்தரணி) ஆவர். தற்பொழுது பிரிட்டனில் வாழ்ந்து வரும் சமலி பெர்னாண்டோ, இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில், கேம்பிரிட்ஜ் நகரில் வேட்பாளராக போட்டி யிடவுள்ளார். பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தல் மே மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சட்டத்தரணியான சமலி பெர்னாண்டோ பிரிட்டனின் பரிஸ்டர் பட்டதாரியும் ஆவர். சட்டத்தரணித் தொழிலுக்கு மேலதிகமாக மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தும் அவர், மன நோயாளர்களுக்குக் கையுறை ஒன்றையும் அணிவிக்க வேண்டும் எனவும் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

சமூகத்தில் மன நோயாளர்களுக்குத் தேவையான உபசரிப்புக்கள் கிடைக்கப் பெறவேண்டும் என்ற ஒரு காரணத்தினாலேயே அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

அதேவேளை அவர் தற் பொழுது பிரிட்டன் அரசியல் மேடைகளில் பேசப்படும் ஒரு பெண்ணாகவும் காணப்படுகிறார். தனது உயர்கல்விக்காக அரசியலைத் தெரிவு செய்த காலம் தொட்டு, அரசியலில் அதிக ஆர்வம் ஏற்பட்டதாக சமலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (செ-11)

# இலங்கை - சீனா...

புக்கள் தொடர்பிலான விவாதமும், ஆராய்வும் இதன் போது இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் இலங்கை இராணுவத் தளபதிக்கும் இடையிலேயே இந்தப் பேச்சு இடம்பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சீன நீர்மூழ்கிக் கப்பல்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை இராணுவ தலைமையக ஆவணம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (செ-11)

# குடும்பஸ்தர் இருவர்...

சின்னையா யோகராஜா (வயது 49) ஆகிய இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சிவநாதனின் முகம் மற்றும் கை கால்களில் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக அவரது உடல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை யோகராஜாவினது மரணம் தொடர்பான மரணவிசாரணையை மந்திகை மருத்துவமனையில் யாழ்.சட்டவைத்திய அதிகாரி பார்த்தீபன் மேற்கொண்டார். (செ-3,60)


## தேவை

பிரபல்யமான விடுதிகளில் ஒன்றாகிய Hotel - Lux Etoiles க்கு வேலையாட்கள் தேவை.

SERVER - பரிமாறுபவர்
KITCHEN - HELPER சமையல் அறை உதவியாளர்
CASHIER - காசாளர் (பெண்)

முப்பாஷையும், அனுபவமும் கொண்டவர்களுக்கு முதலிடம்

தொடர்பு - 0772306310

(C-748)



## A/L பொருளியல்

## வினாவிடை - 3

- பேரினப் பொருளியல் முழுப்பாடப் பரப்பும் விடயத் தலைப்புக்களுடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
- உயர் சித்திபெற இலகு வழிகாட்டி

ரூபா 250

வே.கருணாகரன்
ஆசிரியர் பொருளியற் கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

(125)



உ சிவமயம்

## பொன்னரசியின் அட்ஷய திருதியை அழைப்பிதழ்



தங்கப்பவுண் நகை வியாபாரம்

**BONNATASY NAKAIJAGAM**

Manufacturers of Gold Jewels

தங்கத் திருநாளாம் அட்ஷய திருதியை 21.04.2015 செவ்வாய்க்கிழமை

அட்சய திருதியை தினத்தன்று எமது வாழ்வில் தேவைகளில் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப சிறியதோ, பெரியதோ வாங்கி என்றும் வற்றாத செல்வத்துடன் வளமுடன் வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய டிசைன்களுக்கு முந்துங்கள்

அட்ஷய திருதியை தினத்தன்று தங்கம் வாங்கும் அனைவருக்கும் பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.

76A, Kathuriar Road Jaffna.

TP:-021 222 7648, 077 706 6427

76A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-742)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

ஆரம்பம் 25.04.15. 8.30am 18.04.15க்குமுன் பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → ரக்கா றோட் → AF

(082)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.